# குருந்தூர் பௌத்த மரபுரிமை




**பதிப்பாசிரியர்**

பேராசிரியர் மாலிங்க அமரசிங்க

**ஒருங்கிணைப்புக் குழு**

வாசனா பிரேமச்சந்திர

பீ.எம்.ஆர்.பிரிதர்ஷினி

எம்.வீ.பீ.கல்ப்ப அசங்க

ருவன் விண்ட்சர்

**தமிழ் மொழிபெயர்ப்பு**

நாகரத்னம் சுதர்ஷினி



**பௌத்தாலோக்க நற்பணி மன்றம்**

2023

**குருந்தூர் பௌத்த மரபுரிமை**

**© பௌத்தாலோக்க நற்பணி மன்றம்**

முதல் பதிப்பு - **2023**

**ISBN 978- 624- 5488- 03- 2**

கோட்டுச் சித்திரம் - பேராசிரியர் மலிங்க அமரசிங்க

புகைப்படங்கள் - சுமதி ஹோல்டிங் ஊடகப் பிரிவு/ தொல்லியல் திணைக்களம்

மனோஜ் மிஹிரங்க / அநுராத விஜயவர்தன பண்டார

திட்டங்கள் மற்றும் வரைபடங்கள் - தொல்லியல் திணைக்களம்

**வெளியீடு** : பௌத்தாலோக்க நற்பணி மன்றம்,

இல 491,

காலி வீதி, கொழும்பு- 03.

தொ.பே. இல: 0112352333/0114501549

மின்னஞ்சல்- secretary@bauddhaloka.org

**அச்சகம்** : நியோ கிராபிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,

44 உடஹமுல்ல புகையிரத நிலைய வீதி,

கங்கொடவில, நுகேகொட.

தொலைபேசி இல: 011 2890733, 011 2820220

# உள்ளடக்கம்


| | பக்க இலக்கம் |
|---|---|
| முன்னுரை | I |
| பதிப்பாசிரியர் உரை | I I I |
| அறிமுகம் | V |
| **அத்தியாயம் - 01** | |
| புவியியல் பின்னணி | 1 |
| சனத்தொகை | 6 |
| **அத்தியாயம் - 02** | |
| குருந்தூர் விகாரையின் வரலாற்றுப் பின்னணி | 11 |
| **அத்தியாயம் - 03** | |
| தற்போதைய தொல்லியல் தலையீடுகள் | 24 |
| **அத்தியாயம் - 04** | |
| குருந்தூர் மடாலயத்தின் வளாகம் | 41 |
| உசாத்துணை நூற்பட்டியல் | 90 |

# முன்னுரை

காலவோட்டத்தில் வனங்களின் வசப்பட்டுப்போயிருந்த குருந்தூர் புனிதத் தலமானது இயற்கையினால் ஏற்பட்ட பல இன்னல்களை எதிர்கொண்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தக்கெனப் பிழைத்து, சமீபகாலமாய், மானுடர்களின் கவனத்தை ஈர்த்ததன் விளைவாய் இன்று மீட்சிபெற்று புத்துயிர் பெற்றுள்ளது.

புராணங்கள் மற்றும் வரலாற்று ஆதாரங்கள் ஊடாகவும், இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சிகள் ஊடாகவும், இந்தப் புனித தலம் இந்நாட்டின் வரலாற்றிலே சமயம் சார்ந்த மிக முக்கியமான கேந்திர நிலையமாக கருதப்பட்டுள்ளமை தொடர்பில் அறிய முடிகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்நாட்டுக்கு வருகை தந்த ஆங்கிலேய அரசின் ஊழியர்களான ஹென்றி பார்க்கர், ஜே.பி. லூயிஸ் மற்றும் எச்.சி.பி. பெல் போன்றவர்கள் குருந்தூர் புனித தலத்திற்கு வருகை தந்து அதன் முக்கியத்துவம் தொடர்பில் தங்களது அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளனர் என்றபோதிலும், அக்குறிப்புகளைத் தவிர வேறு ஆய்வுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். அதனைத் தொடர்ந்து பல தசாப்தங்களுக்குப் பின்னர் 1983 இல், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் கைத்தொழில் மற்றும் அறிவியல் அமைச்சர், திரு.சிறில் மத்தியூ அவர்கள் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத்தலத்திற்கு விஜயம் செய்தார். அவர் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி அதனை மீளெழுப்பும் நல்லெண்ணத்துடன் செயற்பட்ட போதிலும் அவ்வேளையில் ஏற்பட்ட எதிர்ப்புகள் காரணமாக பணிகள் யாவும் நிறுத்தப்பட்டதோடு, இந்நாட்டில் தொடர்ந்த கடுமையான பயங்கரவாதச் செயல்கள் காரணமாக இப்பகுதிகளுக்கான போக்குவரத்தும் முற்றாக நிறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து, பல வருடங்களின் பின்னர் யுத்தம் முடிவடைந்த நிலையில் பௌத்தர்களின் கவனம் இவ்வாறான தொல்லியல் தலங்களின் மீது குவியத்தொடங்கியது.

வணக்கத்துக்குரிய கல்கமுவே சாந்தபோதி தேரரும் தொல்பொருள் திணைக்களமும் இணைந்து குருந்தூர் விகாரையில் தொல்லியல் சார் செயற்பாடுகளை முன்னெடுக்க முற்பட்ட போது எழுந்த குழப்பகரமான நிலைமை தொடர்பான வழக்கொன்றில் நானும் அவருக்கு ஆதரவாகச் செயற்பட்ட வேண்டியேற்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் நான் இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தின் தலைவராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அக்குறிப்பட்ட காலப் பகுதியிலேயே பௌத்த மகா சம்மேளனத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட பௌத்த மரபுரிமைகள் ஆணைக்குழுவின் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் முன்வைத்த சாட்சியங்களைக் கருத்திற்கொண்டு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மரபுரிமைகளுக்கு இழைக்கப்பட்ட சேதம் குறித்து அறிந்து நான் மிகவும் வேதனையடைந்தேன். இச்செயல் என்னை வெகுவாகப் பாதித்தது. இவ்வகையில், அப்பகுதியில் உள்ள தனித்துவமான இத்தொல்லியல் தளங்களைப் பாதுகாத்து எதிர்கால

சந்ததியினரிடம் ஒப்படைக்கவேண்டும் என்ற வலுவான உறுதிப்பாடு என்னுள் எழவே, இவை தொடர்பில் கவனம் செலுத்தத் தொடங்கினேன்.

எண்ணற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு கேள்விக்குறியான நிலையில் இருந்த குருந்தூர் தொல்லியல் தளத்தின் பாதுகாப்பு பணி தொல்லியல் துறையுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பல்வேறு குளறுபடிகள், போராட்டங்கள், வழக்குகள் போன்றவற்றிட்கும் முகங்கொடுக்கவேண்டிய இக்கட்டான நிலை உருவானது. இருப்பினும், மிகவும் பொறுமையாகவும் ஒழுங்காகவும் உழைத்தமையாலும், என்னைச் சுற்றியிருந்த, சாசனப்பற்றுள்ள நன்னெறியின் பாற்பட்ட நன்மக்களின் ஆதரவினாலும் இக்கடினமான வேலையை என்னால் செவ்வனே நிறைவேற்ற முடிந்தது. மேலும், எனது நோக்கம் செயல்வடிவம் பெற உடன்நின்று உழைத்த இராணுவத்தினரை இவ்வேளையில் நன்றியுடன் நினைகூருகின்றேன்.

எனது பெற்றோர் எனக்களித்த அன்பையும் சாசனப்பற்றையும், எனது கல்விக் கோயிலான கொழும்பு ஆனந்த வித்தியாலயத்தில் எனது ஆசிரியர்களிடமிருந்து நான் பெற்ற கல்வியையும், ஒழுக்கத்தையும் இந்நேரத்தில் நினைவுகூருகின்றேன். பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும், எனது இப்பக்குவப்பட்ட நிலைக்கு பல வழிகளில் பங்களித்த அனைவருக்கும், குருந்தூர் புனிதத் தலத்தைப் பற்றி இதுவரை கண்டறியப்பட்ட தகவல்களை மிக விரிவாகவும் அழகாகவும் உள்ளடக்கிய வகையில் இந்நூலைத் தொகுக்கவென்று உழைத்தவர்களுக்கும், இம்முயற்சி செயல் வடிவம் பெற பல்வேறு வழிகளில் ஆதரவளித்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பௌத்த வரலாற்றிலும், கலையம்சத்திலும், கட்டிடக்கலையிலும் தனித்துவம் மிக்கதாய் இன்று புத்துயிர் பெற்று விளங்கும் குருந்தூர் புனித தலத்தினை பௌத்த மக்கள் வழிபடுவதற்கான வழிபாட்டுத் தலமாகவும், தொல்லியல் நினைவுச்சின்னங்களைப் பார்வையிடவும், இவ்விடத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், கற்கவும் விரும்பும் மாணவர்களுக்கான தொல்லியில் தலமாகவும் பாதுகாத்து மக்களின் உபயோகத்திற்கு கொண்டு வருவதைப் பெரும்பேறாகக் கருதுகின்றேன்.

இப்படிக்கு,
சாசனப் பற்றாளன்,
ஜகத் சுமதிபால
பணிப்பாளர், பௌத்தாலோக்க நற்பணி மன்றம்
உபதலைவர், உலக பௌத்த சம்மேளனம்

# பதிப்பாசிரியர் உரை

யோ கப்பகொடீஹிபி அப்பமெய்யங்
காலங் கரோன்தோ அதிதுக்கரானி
கேதங் கதோ லோகஹிதாய நாதோ
நமோ மஹாகாருணிகஸ்ஸ தஸ்ஸ

- சமந்தபாசாதிக்கா வினய அட்டகத்தா -

இலங்கையின் வரலாற்றுப் பதிவுகளில் மறைக்கப்பட்ட வரலாற்று அத்தியாயங்களில் ஒன்றாக இக்குருந்தூர் விகாரை இதிகாசக் கதையை அறிமுகப்படுத்தலாம். பல்வேறு காரணங்களால் மறைக்கப்பட்ட இவ்விதிகாசக் கதையை மீண்டும் ஒருமுறை அறிஞர்கள் ஒளி பெற்றிடவும், கற்றோர் பயன்பெறும் வகையிலும் பிரபலப்படுத்திட வாய்ப்பு கிடைத்தமையைப் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றோம்.

இந்த மாபெரும் பணியைத் தேசியப் பணியாகக் கருதி, எத்தனை தடைகள் வந்த போதும் அவற்றைக் கண்டு துவண்டுவிடாது, இவ்வரிய செயல் செயல் வடிவம் பெற அயராது உழைத்த பௌத்தாலோக்க நற்பணி மன்றத்தின் கௌரவத் தலைவர் திரு.ஜகத் சுமதிபால அவர்களுக்கு முதலில் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல அனுமதி வழங்கிய தொல்லியல் பணிப்பாளர் நாயகம் உட்பட்ட தொல்பொருள் திணைக்களத்திற்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குருந்தூர் புனித பூமி பற்றிய தொல்லியல் உண்மைகளை இந்நூல் துல்லியமாக தெரிவிக்கிறது என்றும், எதிர்கால தொல்லியல் பணிகளுக்கு இது உதவியாக அமைந்திடும் என்று எண்ணுகின்றேன். மேலும் அதற்கு வலுசேர்க்கக் கூடிய வகையில் உண்மைகளை உறுதிப்படுத்தும் திட்டங்கள், வரைபடங்கள், புகைப்படங்கள் போன்றவையும் இணைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இத்தொல்லியல் தளம் சார்ந்த உண்மைகளை இலங்கைவாழ் மக்கள் அனைவருக்கும் எடுத்துரைக்கும் வகையில், ஆங்கில மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகளும் சமகாலத்தில் வெளியிடப்படவுள்ளன. இவ்வகையில் மொழிபெயர்ப்புச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த கலாநிதி புத்தினி விஜேசூரிய அவர்களுக்கும், விரிவுரையாளர் செல்வி. நாகரத்னம் சுதர்ஷினி அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், அம்மொழிபெயர்ப்புகளைச் சரிபார்த்த கலாநிதி மடுலுகிரியே விஜேரத்ன அவர்களுக்கும், குருந்தூர் மலைக் கல்வெட்டைப் படித்து விளக்கம் அளித்த தொல்பொருள் திணைக்களத்தின் கல்வெட்டுகள் மற்றும் நாணயவியல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் கலாநிதி மாலினி டயஸ் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பல ஆவணங்களை வழங்கி உதவிய திரு.பாணி வேவல அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறுதியாக, இந்த பணிக்கு பங்களித்த அனைத்து அறிஞர்களுக்கும், பௌத்தாலோக்க நற்பணி மன்றத்தின் ஊழியர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

இந்நூலைக் கற்பதன் ஊடாக, தொல்லியல் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான அறிவொளி உங்கள் அனைவரினதும் ஊற்றெடுக்கும் என்று நம்புகின்றேன். அது அவ்வாறமைந்திட எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

பதிப்பாசிரியர்
பேராசிரியர் மாலிங்க அமரசிங்க

# அறிமுகம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள குருந்தூர் விகாரை இலங்கையில் காணப்படும் தொல்லியல் தளங்களில் தனித்துவமான தொல்லியல் தளமாகும். இங்கு காணப்படும் தூபி களிமண் செங்கற்களைப் பயன்படுத்திக் கட்டப்பட்டுள்ளது. தூபியை நிர்மாணிப்பதற்கான கட்டுமான ஊடகமாக களிமண் செங்கற்கள் பயன்படுத்தப்பட்ட ஒரே தூபி இதுவென்பதோடு அநுராதபுர காலத்தில் கட்டப்பட்ட தாமரை வடிவத்தில் அமைக்கப்பட்ட ஒரே தூபி இதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும், மஹாவம்சத்தின்படி, குருந்தசுல்லகம் பிரிவெனா பிரிவெனாவாகவும் (மஹாவம்சம் 33, 32), நான்காவது அக்கபோதி மன்னரின் காலத்தில் (கி.பி. 667-683) குருந்தபில்லக விகாரை எனவும் (மஹாவம்சம் 44, 21), விளக்கவுரை நூல்களில் (அட்டகதைகள்) குருந்தபாசக விகாரை எனவும் நான்காவது உதய மன்னனின் ஆட்சி காலத்தில் (கி.பி 946-954) சங்கராம சிரிசங்கபோ இராஜமஹா விகாரை என்றும் அழைக்கப்பட்டுள்ளமை அவ்விடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இக்கல்வெட்டிற்கு அமைவாக, இங்கு அபய இசிறிபவ் பியங்கல எனப்படும் தியான மண்டபம் இருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன (Inscriptions of Ceylon, Volume V, Part II- 221-224). முதலாம் விஜயபாகுவின் அரசாட்சி காலத்தின் போது (கி.பி. 1055-1110) குருந்திய விகாரை (இலங்கை பல்கலைக்கழகம் தொகுதி 1 பாகம் II : 409) என்ற பெயரினால் அழைக்கப்பட்டுள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இது குருந்தி விகாரை, குருந்தாவசோக விகாரை (மேத்யூ, 1984:44) முதலிய பெயர்களில் அழைக்கப்படுகிறது.

இந்த விகாரை பல தசாப்தங்களாக கடும்வனத்தில் மறைந்திருந்தது. புதையல்கள் தேடுபவர்கள், பல்வேறு மத நம்பிக்கைகள் கொண்டவர்கள் மற்றும் கடந்த காலத்தை பல்வேறு வழிகளில் தேடுபவர்கள் எனப் பல தரப்பினராலும் கைப்பற்றப்பட்டு அழிவுக்குள்ளாக்கப்பட்டு சேதமடைந்த நிலையில் காணப்படும் இத்தொல்பொருள் தளத்தினால் இன்று ஒரு புதிய சகாப்தம் உதயமாகியுள்ளது. பௌத்தாலோக்க நற்பணி மன்றத்தின் தலைவர் திரு. ஜகத் சுமதிபால உள்ளடங்கலாக இன்னும் பலர் பண்டைய காலத்திலிருந்து வடமாகாணத்தில் ஒரு முக்கியமான தொல்பொருள் தளமாகக் கருதப்பட்டு வரும் குருந்தூர் விகாரையினை மறுசீரமைக்க முன்வந்துள்ளனர். அதன்படி, தொல்லியல் திணைக்களத்தின் மேற்பார்வை, வழிகாட்டல் மற்றும் கல்விப் பங்களிப்புடன், பௌத்தாலோக்க நற்பணி மன்றத்தின் நிதியுதவியுடன் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முன்னெடுக்கப்பட்ட காலம் முதற்கொண்டு இலங்கை வரலாற்றில் ஒரு புதிய பக்கத்தினை இணைக்கக்கூடிய வகையில் பல உண்மைகள் வெளிவந்துள்ளன.

அதுமட்டுமன்றி, எதிர்காலத்தில் இன்னும் பல உண்மைகள் வெளிவரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. கல்கமுவ சாந்தபோதி விகாராதிபதியின் ஆசீர்வாதமும் இலங்கை சிவில் பாதுகாப்பு படை மற்றும் இலங்கை இராணுவத்தினரின் பங்களிப்பும் பணிகளை முன்னெடுப்பதற்குரிய வாய்ப்புகள் எமக்கு கிட்டியமை பெரும் பாக்கியம் எனலாம்.

பௌத்தாலோக்க நற்பணி மன்றம் குருந்தூர் விகாரையை மறுசீரமைப்பு செய்து பாதுகாத்தமையைக் குறிக்கும் வகையில் குருந்தூர் விகாரையின் வரலாறு, இத்தலத்தில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் ஊடாக பெறப்பட்ட ஆய்வு முடிவுகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்நூல் பௌத்தாலோக்க நற்பணி மன்றத்தின் வெளியீடாக தொல்லியல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுகிறது.

# சமர்ப்பணம்

**கலாநிதி மலினா சுமதிபால அம்மையாருக்கு............**

# அத்தியாயம் - 01
## புவியியல் பின்னணி

முல்லைத்தீவு மாவட்டம் இலங்கையின் வடக்கு மாகாணத்தின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ளதோடு 2516.9 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது (Statistical Hand Book 2021:1). இப்பிரதேசம் திருகோணமலை, வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் எல்லையாக அமைந்துள்ளது. இம்மாவட்டத்திலுள்ள நாயாறு களப்பில் சென்று சேரும் வகையில் பாயும் மணலாறுக்கு அருகாமையில் இக்குருந்தூர் தொல்லியல் தலம் அமைந்துள்ளது.


ஆரம்ப கால அரசியல் அல்லது நிர்வாகப் பிரிவுகளின்படி, இத்தீவு மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பிஹிட்டி நாடு, ருஹுணு நாடு, மாயா நாடு என்று அழைக்கப்பட்டது. இப்பழைய பிரிவுகளின்படி, இத்தொல்லியல் பகுதியானது பதிட்டாரட்டவிற்குச் (பிஹிட்டி நாடு) சொந்தமானதாகக் காணப்பட்டது.

கி.பி இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொலமியின் இலங்கை வரைபடத்தில், நாகதீபம் எனக் குறிக்கப்பட்ட இடம் தற்போதைய வவுனியா மாவட்டமாகும். இதே மாவட்டத்தில் அமைந்துள்ள நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த தோணிக்கல் கல்வெட்டில், இப்பகுதி வடக்குப் பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது (*Epigraphia Zeylanica* III:172–188). அநுராதபுர காலத்தில், இது பிஹிட்டி நாடு என்றழைக்கப்பட்ட உத்தரபஸ்ஸ, உத்தர தேச, உத்தரராஷ்டம், உதுர்பாசா மற்றும் உதுர் காரா போன்ற பெயர்களில் அழைக்கப்பட்ட அநுராதபுரத்தை அதன் தலைநகராகக் கொண்ட இராஜரட்டைக்குச் சொந்தமாக இலங்கையின் வடக்குப் பகுதியில் வவுனியா மாவட்டத்தில் அமைந்திருந்தது (வீரசிங்க 1985: 11).

'குருந்துகமு ரட்ட'(குருந்தனூர் நாடு) என்ற பெயரில் இலங்கைத் தீவின் எல்லைப் புத்தகத்தில் (கடையிம்பொத்த) குறிப்பிடப்பட்டிருப்பது வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டிருந்த குருந்திரட்டவாக (குருந்திநாடு) இருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது (அபயவர்தன 1978: 96).

பழைய பிரிவுகளின்படி, இப்பகுதி வன்னிப் பகுதியைச் சேர்ந்ததாகவும், இது வடக்கே யாழ்ப்பாணத்தையும் தெற்கே அருவி ஆற்றையும் எல்லையாகக் கொண்டிருந்தது எனவும், வவுனியா மாவட்டம் வன்னியின் தெற்குப் பகுதியாகவும் முல்லைத்தீவு மாவட்டம் அதன் வடக்குப் பகுதியாகவும் காணப்பட்டது என்று அடையாளப்படுத்தப்படுகிறது. மேலும், டச்சுக்காரர்கள் அன்றைய வன்னிப் பிரதேசத்தின் பரப்பளவு சுமார் 1864 சதுர

கிலோமீட்டராகவும், முல்லைத்தீவு மாவட்டம் 927 சதுர கிலோமீற்றராகவும் இருந்திருக்கலாம் மதிப்பிட்டுள்ளனர் (Lewis J.P 1895 : 1).





19 ஆம் நூற்றாண்டில் வன்னியைக் காட்டும் வரைபடத்திலிருந்து பெறப்பட்ட ஒரு பகுதி J.P. Lewis, 1895 : 1

இலங்கையில் பல முக்கியமான நிலப்பரப்பு வலயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் மேற்குறிப்பிடப்பட்ட இப்பகுதி பகுதி வடக்கு கடற்கரை பகுதியைச் சேர்ந்ததாகக் காணப்படுகின்றது. (குணசேன இலங்கை வரைபடப் புத்தகம், புதிய பதிப்பு 2018:26, 30, 32) இது மிகவும் விரிவான அலைகள் மற்றும் சதுப்பு நிலங்களையும் உட்புறம் கடல் பகுதிகளைக் கொண்டதாகவும் காணப்படுகிறது. இவ்வகையில், தரைத்தோற்ற அம்சங்களுக்கு அமைவாக கடற்கரைகள், முகடுகள், விரிகுடாக்கள் மற்றும் முனைகளைக் இப்பகுதி கொண்டுள்ளது. இலங்கையின் புவி அமைப்பு தொடர்பில் கவனத்திற் கொண்டால் தரை மேற்பரப்பின் பெரும்பகுதி கேம்ப்ரியன் காலத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் உருவாகியுள்ளது. இவ்வடிப்படையில், இலங்கை இப்புவியின் பழைமையான நிலப்பரப்புகளில் ஒரு பகுதி எனலாம். இலங்கையின் தரைத்தோற்ற உருவாக்கத்தின் அடிப்படையில் பாறைகள் மற்றும் தாதுக்களின் பரவலைக் கருத்தில் கொள்ளும்போது முல்லைத்தீவு மாவட்டம் ‘மயோசீன்’ காலத்தின் வண்டல் படிவுகளைக் கொண்ட நிலப்பகுதிக்குச் சொந்தமானது. அதன் கனிமப் படிவுகள் சற்று சரளை கலந்த தன்மை கொண்டது. மண்ணின் தன்மையைக் கருத்தில் கொள்ளும் பட்சத்தில், இது மணல் மற்றும் மணல் முகடுகளில் உள்ள ரெகோசோல்லஸ் சமதரை வகையைச் சேர்ந்தது.

இப்பகுதி வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழையால் ஆண்டுதோறும் மழையைப் பெறுகிறது. இது வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழையிலிருந்து (நவம்பர்-மார்ச்) 250-500 மிமீ மற்றும் தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழையிலிருந்து (மே-செப்டம்பர்) 1000-1500 மி.மீ வருடாந்த மழை வீழ்ச்சியைப் பெறுகிறது. சராசரி வெப்பநிலை சுமார் 27.5 டிகிரி செல்சியஸ் ஆகும். ஆகவே. இப்பகுதியில் காணப்படும் வெப்பநிலை மற்றும் மழை வீழ்ச்சியின் அளவை இலங்கையின் ஒட்டு மொத்த மழைவீழ்ச்சியோடு ஒப்பிட்டு பார்க்கின்ற போது, இப்பிரதேசம் நாட்டின் வெப்ப வலயத்திற்குரியதாகக் காணப்படுகின்றமை தெளிவாகின்றது. அதாவது, பெரும்போக மற்றும் சிறுபோக பயிர்ச்செய்கை பருவத்தில் இப்பகுதியின் ஆண்டு வறட்சி வீதம் அண்ணளவாக 10% - 20% ஆகும் அதாவது, ஒரு வருடத்தில் 2-3 மாதங்கள், வறட்சியான காலநிலையே நிலவுகின்றது.

இலங்கையில் காணப்படும் காடுகளை அடிப்படையாகக் கொண்டு மூன்று முக்கிய வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, முல்லைத்தீவு மாவட்டம் வெப்ப வலயக் காடுகள் எனும் வகையைச் சேர்ந்ததாக காணப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டு பெறப்பட்ட தரவுகளின்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மொத்த காடுகளின் பரப்பளவு 169,305.5 ஹெக்டேயர் ஆகும். (குணசேன, இலங்கை வரைபடப் புத்தகம், 2018:34)




குருந்தூர் விகாரையின் அமைவிடம்

இப்பகுதியின் வாழ்வாதாரம் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. பழங்காலத்திலிருந்தே நெற் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமைக்கான சான்றுகள் உள்ளன. வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழையால் பயிர்ச்செய்கைக்குத் தேவையான நீர் பெறப்பட்டுள்ளது. 4 பிரதான குளங்கள், 17 நடுத்தர அளவிலான குளங்கள் மற்றும் 409 சிறிய அளவிலான குளங்கள் விவசாயத்திற்குத் தேவையான நீரை வழங்கியுள்ளன. இப்பகுதியில் சுமார் 70 கி.மீ. அளவில் கடற்கரையோரம் காணப்படுகிறது. அதுமட்டுமின்றி நாயாறு, மாத்தளன், நந்திக்கடல் மற்றும் கொக்கிளாய் ஆகிய கடனீரேரிகள் இப்பகுதியை வளப்படுத்துகின்றன. இப்பகுதி மீன் வளர்ப்பிற்கு ஏற்றது என்பதோடு இறால் மற்றும் நண்டு வளர்ப்பிற்கும் பிரசித்தி பெற்றது. (Statistcal Hand Book 2021:3,5).

நிர்வாகக் கட்டமைப்பைப் பற்றி பார்க்கும்போது, 1833 இல் கோல்புறூக்-கமரன் சீர்திருத்தத்தின் கீழ் முழு தீவுக்கும் ஒரு நிர்வாக அமைப்பு காணப்பட்டது. இச்சீர்திருத்தத்திற்குப் பின்னர், நாடானது முதன் முறையாக தெற்கு, மேற்கு, வடக்கு, மத்திய மற்றும் கிழக்கு என ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. இந்த ஐந்து மாகாணங்களில் காணப்பட்ட ஒவ்வொரு மாவட்டமும் அதன் சொந்த நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டிருந்தன. 1889 இல், மாகாணக் கட்டமைப்பு வடக்கு மாகாணம் உட்பட 9 மாகாணங்களாக விரிவுபடுத்தப்பட்டது (குணசேன, இலங்கை வரைபடப் புத்தகம், 2018:34).

இலங்கையின் தற்போதைய நிர்வாகக் கட்டமைப்பானது மாகாணம், மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. இவ்வகையில், வடக்கு மாகாணமானது வன்னி, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களைக் கொண்டுள்ளதோடு. வன்னி மாவட்டம் முல்லைத்தீவு மாவட்டம் மற்றும் வவுனியா மாவட்டம் என இரு பகுதிகளாகப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. தற்போது, வடக்கு மாகாணம் ஐந்து முக்கிய நிர்வாக மாவட்டங்களின் கீழ் செயற்பட்டு வருகின்றது. (1979ஆம் ஆண்டு புதிதாக சேர்க்கப்பட்ட மாவட்டங்களில் முல்லைத்தீவு மாவட்டமும் ஒன்று).

வட பிராந்தியத்திற்குட்பட்ட நிலப்பரப்பு மாவட்டங்கள், பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளடங்கலாக பின்வருமாறு காணப்படுகின்றது.

| மாவட்டங்கள் | பிரதேச செயலாளர் பிரிவுகள் | கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் | நிலப்பரப்பு **(சதுர கி. மீ)** |
|---|---|---|---|
| முல்லைத்தீவு | 06 | 136 | 2,693 |
| மன்னார் | 05 | 153 | 1,996 |
| வவுனியா | 04 | 102 | 1,891 |
| யாழ்ப்பாணம் | 15 | 435 | 1025 |
| கிளிநொச்சி | 04 | 95 | 1, 279 |

முல்லைத்தீவு மாவட்டத்திற் காணப்படும் ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகள் வருமாறு:

- துணுக்காய்
- மாந்தை கிழக்கு
- புதுக்குடியிருப்பு
- ஒட்டுசுட்டான்
- கரைதுறைப்பற்று
- மணலாறு/வெலிஓயா [6] (Statistical Pocket Book 2021, Page 6)

மேற்குறிப்பிடப்பட்ட தற்போதைய பிரிவுகளின்படி, குருந்தூர் தொல்லியல் தளம் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்திருக்கின்றது. இப்பகுதி ஆரம்ப காலத்தில் கரிக்கட்டு மூலை தெற்கு என அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சனத்தொகை

குருந்தூர் தொல்லியல் தளம் உள்ளடங்கும் முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவுகளில் பண்டைய காலத்திற் காணப்பட்ட வகைப்பாட்டின் அடிப்படையில் 1817 முதல் 1891 வரை காணப்பட்ட சனத்தொகை விபரங்கள் வருமாறு, (Lewis J.P 1895 : 46)

| **பிரதேச செயலாளர் பிரிவு** | **1817** | **1839** | **1871** | **1881** | **1891** |
|---|---|---|---|---|---|
| கரிக்கட்டு மூலை வடக்கு | 1233 | 1751 | 2636 | 2922 | 2810 |
| கரிக்கட்டு மூலை தெற்கு | 539 | 589 | 858 | 745 | 1002 |
| முள்ளியவளை | 750 | 833 | 1098 | 1209 | 1041 |
| புதுக்குடியிருப்பு 6 | 1106 | 1138 | 1523 | 1348 | 1194 |
| கருணாவல்பட்டு வடக்கு | 302 | - | - | - | - |
| கருணாவல்பட்டு தெற்கு | 633 | 528 | 443 | 387 | 331 |
| துணுக்காய் 7 | 539 | 517 | 390 | 390 | 538 |
| கரைதுறைப்பற்று வடக்கு | 598 | 862 | 798 | 636 | 606 |

மத அடிப்படையில் 1881 முதல் 1891 வரையிலான சனத்தொகை (Lewis J.P 1895 : 92)

| **மாவட்டம்** | **பால்** | **இந்து** | **பௌத்தம்** | **முகம்மதியர்** | **கிறிஸ்தவர்** |
|---|---|---|---|---|---|
| | | 1881 -1891 | 1881 - 1891 | 1881 - 1891 | 1881 - 1891 |
| வவுனியா | ஆண் | 68 - 66 | 12 - 13 | 9 - 9 | 11 - 11 |
| முல்லைத்தீவு | ஆண் | 81 - 80 | - | 5 - 6 | 14 - 14 |
| வவுனியா | பெண் | 66 - 68 | 13 - 15 | 9 - 9 | 11 - 10 |
| முல்லைத்தீவு | பெண் | 81 - 79 | - | 6 - 6 | 13 - 15 |

பழைய பிரிவுகளின்படி, குருந்தூர் தொல்லியல் தளமானது கரிக்கட்டு மூலை தெற்குக்கு உரித்தானதாகக் கருதப்பட்டுள்ளது. இப்பகுதியில் பதினெட்டு கிராமங்கள் அமைந்திருந்ததோடு, அக்கிராமங்களின் சனத்தொகைப் பரவல் பின்வருமாறு காணப்பட்டுள்ளது (Lewis. J.P 1895:76)

**கரிக்கட்டு மூலை – தெற்கு**

| | **1817** | **1839** | **1881** | **1891** |
|---|---|---|---|---|
| அலம்பில் | 71 | 44 | 71 | 94 |
| ஆண்டான் குளம் | 22 | 62 | 52 | 71 |
| செம்மலை | 41 | 42 | 80 | 99 |
| சிவந்தமுறிப்பு | - | - | - | - |
| இரமியங்குளம் | 3 | - | - | - |
| காட்டுத்தட்டாமலை | - | - | - | - |
| கனகநாயங்குடியிருப்பு | 27 | - | - | - |
| கரடிப்பூவல் | 10 | - | - | - |
| கருவாட்டுக்கேணி | 44 | 66 | 109 | 60<br>{ 147 |
| கொக்கிளாய் | - | - | - | - |
| கோட்டைப்பணிக்கன்காடு | - | 71 | 182 | 147 |
| கொக்குத்தொடுவாய் | 78 | 107 | 239 | 361 |
| குமுழமுனை | 108 | - | - | - |
| குஞ்சுக்குளம் | 28 | | | |
| தட்டாமலை | 56 | 90 | 12 | 23 |
| துவரங்கரை | 24 | - | - | - |
| துவரங்குளம் | 15 | - | - | - |
| வேப்பங்குளம் | 12 | - | - | - |
| | **539** | **482** | **745** | **1,002** |

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1953 முதல் 2012 வரையில் காணப்பட்ட இனக்குழுக்களை அடிப்படையாகக் கொண்ட சனத்தொகை விபரம் வருமாறு (Statistical Pocket Book 2021:9).

| சிங்களவர்கள் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | இலங்கை மூஸ்லீம்கள் | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| 3.53% | 89.82% | 0.53% | 5.96 | 0.16 |

குருந்தூர் தொல்லியல் தளம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இனக்குழுக்களை அடிப்படையாகக் கொண்ட சனத்தொகை விபரம் (Statistical Pocket Book 2021:34)

| **சமயம்** | **1953** | **1963** | **1971** | **1981** | **2001** | **2012** |
|---|---|---|---|---|---|---|
| பௌத்தம் | 5209.4 | 7003.3 | 8536.9 | 10288.3 | 12986.6 | 14272.1 |
| இந்து | 1610.5 | 1958.4 | 2238.7 | 2297.8 | 1312.9 | 2561.3 |
| இஸ்லாம் | 541.5 | 724.0 | 901.8 | 1121.7 | 1435.9 | 1967.5 |
| உரோமன் கத்தோலிக்கம் | 724.4 | 884.9 | 1004.3 | 1130.6 | 1185.9 | 1552.2 |
| பிறர் | 11.9 | 11.4 | 8.3 | 8.3 | 8.4 | 6.4 |

முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிக்கும் மக்கள் பின்பற்றும் சமயங்களை அடிப்படையாகக் கொண்ட சனத்தொகை தொடர்பான விபரம் (Statistical Pocket Book 2021:9) .

| பௌத்தம் | இந்து | இஸ்லாம் | உரோமன் கத்தோலிக்கம் | கிறிஸ்தவம் | பிறர் |
|---|---|---|---|---|---|
| 1.01% | 72.33% | 6.17% | 17.28% | 2.93% | 0.08% |


குருந்தூர் தொல்பொருள் தளம் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் மக்கள் பின்பற்றும் சமயங்களின் அடிப்படையிலான சனத்தொகை தொடர்பான விபரம் - சதவீதம் (Statistical Pocket Book 2021:35).

| தொடர் இல. | இனக்குழு | 1953 | 1963 | 1971 | 1981 | 2001 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மொத்த மக்கள் தொகை | 8,098 | 10,582 | 12,690 | 14,847 | 16,930 | 20,359 |
| 2 | சிங்களவர்கள் | 5617 | 7,513 | 9,131 | 10,980 | 13,876 | 15,250 |
| 3 | இலங்கைத் தமிழர் | 885 | 1,165 | 1,424 | 1,887 | 7,32 | 2, 269 |
| 4 | இந்தியத் தமிழர் | 974 | 1,123 | 1,175 | 819 | 855 | 840 |
| 5 | இலங்கை முஸ்லீம்கள் | 464 | 627 | 828 | 1,047 | 1339 | 1893 |
| 6 | இந்திய முஸ்லீம்கள் | 48 | 55 | 27 | - | - | - |
| 7 | ஐரோப்பியர் | 7 | | | | | |
| 8 | பறங்கியர் மற்றும் யூரேசியன் | 46 | 46 | 45 | 39 | 35 | 38 |
| 9 | மலாய் | 25 | 33 | 43 | 47 | 55 | 44 |
| 10 | வேடுவர் | 1 | - | -- | - | - | - |
| 11 | இலங்கை செட்டி | - | - | - | - | - | 6 |
| 12 | பரதர் | - | - | - | - | - | 2 |
| 13 | பிறர் | 32 | 21 | 16 | 28 | 37 | 18 |

மேலே கொடுக்கப்பட்ட தகவல்கள் காலனித்துவ ஆட்சி காலத்திலிருந்து இப்பகுதியில் பல்வேறு இனக்குழுக்கள் மற்றும் மதங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

வவுனியா மற்றும் முல்லைத்தீவைச் சுற்றியுள்ள பகுதியில் 1891 காலப்பகுதிகளில் ஏழு மலாய்க்காரர்கள், நான்கு ஆப்கானியர்கள், ஒரு கா.ஃ.பிர் மற்றும் மூன்று பார்த்தியர்கள் வாழ்ந்துள்ளனர் (லூயிஸ் 1895:81). இதனூடாக இப்பகுதி பழங்காலத்திலிருந்தே வெளிநாட்டு வர்த்தக மையமாக இருந்தமைக்கான சான்றுகளை அறிய முடிகிறது.

மேலும், தொல்பொருள் திணைக்களத்தினால் வடமாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட தொல்லியல் தளங்கள் மற்றும் நினைவுச்சின்னங்களை ஆவணப்படுத்தும் திட்டத்தின் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 176 தொல்லியல் தளங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதன்படி, இந்தப் பிரதேசத்தின் தொல்பொருள் பரவலைக் கருத்தில் கொண்டு அனுராதபுர காலத்தில் அதிக மக்கள் தொகை இருந்திருக்கலாம் எனக் கூறமுடியும். (வரைபடம் எண். 03).




முல்லைத்தீவு மாவட்டத்தில் தொல்லியல் தளங்கள் அமைந்துள்ள இடங்கள்

# அத்தியாயம் - 02

## குருந்தூர் விகாரையின் வரலாற்றுப் பின்னணி

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் விகாரைகளுள் குருந்தூர் விகாரை தனித்துவமான சிறப்பம்சங்களைத் தன்னகத்தே கொண்ட விகாரையாகும். புத்தர் இலங்கைக்கான தனது இரண்டாவது விஜயத்தின் போது, இங்கு விஜயம் மேற்கொண்டார் என்பது சான்றாதாரங்களின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். (Sessional Papers, H. Parker 1886:449 ; Lewis J.P. 1895: 10-311). இலஜ்ஜிதிஸ்ஸ (கி.மு. 119-109) மன்னனுக்குப் பின்னர் இலங்கையை ஆண்ட கல்லாதனாக (கி.மு. 110-103) மன்னரால் கட்டப்பட்ட இவ்விகாரை, வம்சக் கதைகளிலும் இதிகாச விளக்கவுரைக்கதைகளிலும் குறிப்பிடப்படுகின்ற ‘குருந்தபாசக’ விகாரை என அடையாளப்படுத்தப்படுகிறது. மேலும் அங்கு குருந்தசுல்லக எனும் அறநெறி போதிக்கும் பிரவெனா இருந்ததாகவும் குறிப்பிடுகிறது. (மஹாவம்சம் 33, 32). மேலும், குருந்தி இதிகாசக்கதை தொடர்பான தகவல்கள் “சமந்தபாசாதிக்கா” இதிகாச விளக்கவுரையிலும் காணப்படுகின்றன. (விமதி விநோதனிநாம சமந்தபாசாதிக்கா வினயட்டகத்தா டீக்கா:1935). கி.மு 268 இல் ஆட்சியினைக் கைப்பற்றிய பேரரசரான தர்மாசோக காலத்தின் போது, பாடலிபுரத்தில் மொக்கலிபுத்ததிஸ்ஸ தேரரின் தலைமையில் மூன்றாவது தர்ம பிரசங்கம் நடைப்பெற்றது. அப்பிரசங்கத்தின் போது வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட பாளி திரிபிடக இதிகாச விளக்கவுரை, கி.மு. 250 இல் மிஹிந்து மகா தேரரால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு, சிங்கள பிக்குமார்களுக்காகவென இலகு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு போதிக்கப்பட்டது. அவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டவை “சிங்கள திரிபிடக விளக்கவுரைகள்” (ஹெல அட்டுவா) என அறியப்பட்டன. அட்டகத்த மகா விகாரையை வசிப்பிடமாகக் கொண்ட புத்தசிறி தேரரின் அழைப்பின் பேரில் புத்தகோச தேரர் மற்றும் மகா விகாரையில் கிரந்தாகர பிரிவெனாவில் வசித்த பிக்குகளின் மேற்பார்வையின் கீழ் சிங்கள திரிபிடக விளக்கவுரைகளை மீண்டும் மொழிபெயர்த்ததாகவும், இதிகாசக் கதைகளை பாளி மொழியில் மொழிபெயர்க்க மகாவிகாரையை சேர்ந்த புத்தசிறி தேரரே அழைத்ததாக புத்தகோச தேரரின் சமந்தபாசாதிக்காவின் அறிமுகமாகிய ‘பாஹிரநிதானவர்ணனையில்’ குறிப்பிடப்பட்டுள்ளது. (Dias Malini, 2019:8). புத்தகோச தேரரின் இதிகாச விளக்கவுரையானது இதிகாச மஹா இதிகாச விளக்கவுரை, பன்ச்சரி இதிகாச விளக்கவுரை மற்றும் குருந்தி இதிகாச விளக்கவுரை போன்ற இதிகாச விளக்கவுரைகளின் துணைக்கொண்டே ஆக்கியதாகக் கூறப்படுகிறது. இத்தகு இதிகாச விளக்கவுரைகளில் முக்கிய இதிகாச விளக்கவுரையாக “குருந்தி” இதிகாச விளக்கவுரை கருதப்படுகின்றது. இவ் இதிகாச விளக்கவுரை குருந்தூர் விகாரையில் தொகுக்கப்பட்டதாக இலக்கியச் சான்றாதாரங்களில் வழி அறிய முடிகிறது. இதுகுறித்து பி. வீரசிங்க இவ்வாறு கூறுகிறார்:

“மஹிந்த தேரர் இத்தீவில் வசிப்பவர்களின் நலனுக்காக இதிகாச விளக்கவுரைகளை இலகு மொழியில் எழுதினார். இவற்றுள், முதன்மையானதாகக் கருதப்படும் மஹா பச்சரிய மற்றும் குருந்தி என்பன சிங்களமொழியிலமைந்த இதிகாச விளக்கவுரைகள் ஆகும். மேற்கூறப்பட்ட குருந்தி இதிகாச விளக்கவுரை தோற்றம் பெற்ற பௌத்த கேந்திர நிலையமாக, முல்லைத் தீவில் காணப்படும் பௌத்தச் சிதைவுகளுடன் கூடிய இக்குருந்தன் மலை என்று கருதமுடியும். (வீரசிங்க. பி 1985 : 47).” முதலாம் அக்கபோதி மன்னர் (கி.பி. 571-604) குருந்தூர் விகாரையைக் ஸ்தாபித்ததாகவும், அதைச் சுற்றியுள்ள சுமார் மூன்று யோஜனைகள் (25 தொடக்கம் 30 மைல்கள் வரையான) அகலத்தில் தென்னந்தோப்பொன்றினை அமைத்ததாகவும் கூறப்படுகிறது (மஹாவம்சம். 41, 16: Rahula Walpola 1956:240). மேலும், சிங்கள வம்சக்கதைகளின் அடிப்படையில் இப்பிரதேசம் குருந்தன் குளம் என குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாம் அக்கபோதியால் கட்டுவிக்கப்பட்ட குருந்தவாப்பிய அல்லது குருந்துவெவ எனப்படும் “குருந்தன் ஊர்” குளம், குருந்தூரில் காணப்படும் புராதன விகாரையின் சிதைவுகள் காணப்படும் தொல்லியல் தளத்திற்கு சற்றுத்தொலைவில் அமையப்பெற்ற விசாலமான குளமாகும். இக்குளம் தற்போது “தண்ணிமுறிப்புக்குளம்” என்று அழைக்கப்படுகிறது. இது மணலாற்றின் நீர்பாசனத் துணைக்கொண்டு வளம்பெறுகின்றது. (இலங்கை பல்கலைக்கழகத்தின் இலங்கை இதிகாசம் 1964: 340) இப்பிரதேசத்தில் சிங்களவர்களால் கட்டியெழுப்பப்பட்டு கைவிடப்பட்ட நிலையிலுள்ள பெரிய, சிறிய அளவிலான எண்ணற்றக் குளங்களை காணக்கூடியதாகவுள்ளதாக ஜே.பி லூவிஸின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றுள், குருந்தன் குளம் மற்றும் தண்ணிமுறிப்புக் குளம் ஆகியவை பிரதானமானவை என குறிப்பிடப்பட்டுள்ளது. எச். பார்க்கருடைய அறிக்கையின் அடிப்படையில் தண்ணிமுறிப்பு குளம் மற்றும் குருந்தன் குளம் என்பன நாயாறு களப்பில் அமையப் பெற்றிருந்தன. (Nicholas C.W. 1959: 86-87).[1]

நான்காம் அக்கபோதி மன்னன் (கி.பி. 667-683) ஆட்சிக் காலத்தில் அமைச்சரொருவர் ஊடாக குருந்தபில்லக விகாரையில் மாடிக் கட்டிடம் ஒன்றை

[1] Kahallatanaga (B.C. 110-103) founded kurundavasoka Vihara. There was a parivena named Kurundivelu Vihara. The village Kurundaka is mentioned in the Commentaries. Aggabodhi I (571-604) is credited with the building of Kurunda Vihara (the Sinhalese Chronicles call it Kurundu tank), around which he planted a coconut plantation said to have been 3 yojanas(25 to 30 miles) in extent. A minister of Aggabodhi IV (667-683) built a pasada in Kurundapillaka Vihaa. Vijayabahu I (1055-1110) restored Kurundiya Vihara. It is ♁probable that all these are variant names of one and the same monastery situated in Kurundi-rattha, an area corresponding to present Karikattumulai South Division of Vavuniya District: the ancient name is preserved in the ruins at modern Kuruntan-Ur. The Kurundi district was under Tamil domination in the regin of Parakkamabahu II (1236-1271) and was later occupied by the invader Canadabhanu. Near Kurunda, Aggabodhi I built Ambilapassava Vihara.

கட்டுவித்ததாகக் குறிப்பிடப்படுகிறது. (மகாவம்சம் 44, 21). முதலாம் விஜயபாகு மன்னன் (கி.பி. 1055-1110) குருந்தூர் விகாரையை புனர்நிர்மாணம் செய்ததாக கூறப்படுகிறது. (லங்கா பல்கலைக்கழக குழு 1 பகுதி 2 : 409). இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் (கி.பி. 1236-1270) ஆட்சியின் போது, திராவிட மன்னர்களான கலிங்கன், ஜெயபாகு மற்றும் அவர்களது 40,000 இலக்க இராணுவத்தால் கட்டப்பட்ட 15 முகாம்களில் குருந்தூரும் ஒன்றாகும். பலவந்தமாகக் கட்டப்பட்ட முகாம்கள் இரண்டாம் பராக்கிரமபாகுவின் படையால் மீட்டெடுக்கப்பட்டதாக மகாவம்சம் கூறுகிறது. (மகாவம்சம் 83, 16-32). கலிங்கன் மற்றும் கஜபாகுவின் கோட்டைகள் புலத்திபுர (பொலன்னறுவை), ...... குருந்தூர் (குருந்து) ...... முதலிய இடங்களில் அமைந்திருந்தன. இது தொடர்பாக வம்சக் கதைகள், புஜாவலியா மற்றும் நிகாய சங்கிரஹா ஆகிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் நடந்த பெரும் போருக்குப் பின் (தோற்று) ஓடிய மன்னன் சந்திரபானு, சோழ, பாண்டிய நாடுகளில் பல தமிழ் இராட்சதர்களை திரட்டி, வலிமை பெற்று, தன் படையுடன் மாவடுவில் வந்திறங்கியதோடு, பதி மற்றும் குருந்தூர் முதலான பிரதேசங்களைக் கைப்பற்றிய சந்திரபானு மன்னன், அப்பிரதேசங்களில் வாழ்ந்த சிங்களவர்களையும் தன்வசப்படுத்தினான். சுப்பப்பத்தவிற்குச் (யப்பஹுவ) சென்று முகாமிட்டு……… (மஹாவம்சம் 83, 15-16 லியனகமகே 1989: 168) இவ்வடிப்படையில், சந்திரபானு மன்னன் பதி மற்றும் குருந்தூர் பிரதேச வாழ் சிங்களவர்களை தமது ஆட்சிக்குக் கீழ் கொண்டு வந்தமை தெளிவாகின்றது (அபயவர்தன 1989 : 168)

எச்.சீ.பீ. பெல், 1905 இல் முன்வைத்த தொல்பொருள் நிர்வாக ஆய்வு அறிக்கையில், தனது பயணக் குறிப்புகளில் குருந்தூர் பற்றிய உண்மைகளை பட்டியலிட்டுள்ளார். கடந்த காலங்களில் இப்பகுதியில் பெரிய குடியேற்றம் ஒன்று இருந்தமைக்கான சான்றுகள் இருப்பதாக கூறப்படுகிறது. ஒதியமலையிலிருந்து வடகிழக்கே ஏழு மைல் தொலைவில் உள்ள ஒரு மலை "குருந்தன் மர மலை" என்று கூறப்பட்டுள்ளது. இங்குள்ள மரங்கள் சிங்களத்தில் "பகுருகஸ்" என்று அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது (Bell 1905 : 19). [2]

சிங்களக் கடயிம் பொத்த (எல்லைகளை வரையறுக்கும் நூல்) இற்கு அமைவாக, "குருந்தக" என்ற பெயர் "குருந்துகமு நாடு" என்று அழைக்கப்பட்டுள்ளது. இங்கு, நாடு என்பது அந்தந்த பகுதி அல்லது மாவட்டமாக இருக்க வேண்டும் (அபயவர்தன 1978 : 105). அனுராதபுரத்திற்கு வடக்கே உள்ள இரண்டு கோரளைகளான கெதே மற்றும் கடவத் என்பன குருந்த நாடு எனும் பெயரில் அழைக்கப்பட்டிருக்கலாம் என்ற ஒரு கருத்தும்

[2] The neighbouring hill of Erupothana, Kuruntanmali, Kuruntan-Ur (which may have been a large settlement, and would probably repay excavation);

உள்ளது. எனினும், வவுனியாவில் உள்ள கரிகட்டுமலையின் தென்பகுதியில் குருந்த நாடு அமைந்திருந்தது என்ற நிக்கோலஸின் கூற்றும் இவ்விடத்தில் கவனத்திற்குரியது. மேலும், பழங்காலத்தில் குருந்தி நாடு என்றழைக்கப்பட்ட பிரதேசம் தற்போது குருந்தனைவூர் (Nicholas 1979: 102) என்ற பெயரில் அமையப்பெற்றிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

பழங்கால அறிக்கைகளில் தொல்லியல் தளமான இக்குருந்தூர் பற்றியும், தொன்மையான இடங்கள் மற்றும் அதன் தொல்பொருள் எச்சங்கள் பற்றியும் பல தகவல்கள் உள்ளன. அத்தகைய பழைமையான அறிக்கைகளுள் ஒன்றான லூயிஸ் அறிக்கை, தொல்பொருள் எச்சங்களின் பரவல் தொடர்பாக ஆழமான விளக்கங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி, “கற் சுவரின் விளிம்பிலிருந்து, படிகளின் வழியாக மலையின் உச்சிக்கு செல்லலாம். மலையுச்சி தட்டையானதாக அல்லது நீள்வட்டமான அல்லது வட்டமான வடிவத்தில் அமையப் பெற்றுள்ளது. முழு மலையைச் (ஒருவேளை) சுற்றிலும் 7 அடி அல்லது 8 அடி உயரம் மற்றும் 1/2 அல்லது 1 அங்குல அகலம் கொண்ட சதுரக்குற்றிகளாலான மதில் சுவரை காணக்கூடியதாக இருக்கும். மதில் சுவரின் வடக்குப் பகுதிக்குப் பின்னால் உள்ள மலையில் சில இடிபாடுகள் இருந்தன: ஆனால் அவையனைத்தும் பிற்காலங்களில் முன்னெடுக்கப்பட்ட தமிழ் குடியேற்றங்களால் வேண்டுமென்றே (willful defacement) சிதைக்கப்பட்டதன் விளைவாக அழிந்துவிட்டதாக கூறப்படுகிறது. மதில் சுவரின் தெற்கு முனையிலிருந்து ஏரிக்கரையின் தெற்கு முனை வரை சிறிது தூரம் பயணம் செய்யும் பொழுது ஐந்து தலைகள் கொண்ட நாகத்தின் சிலையுடன் பழைமையான விகாரையொன்றை காணலாம். சுவருக்குப் பின்னால் குறைந்தது மூன்று விகாரைகள் அல்லது முக்கியத்துவம் வாய்ந்த மூன்று கட்டிடங்களின் இடிபாடுகளைக் காணலாம். அவை மடுகந்தை, மகாகச்சக்கொடி அல்லது ஈறற்பெரியகுளம் போன்ற இடங்களில் காணப்படும் கட்டிடங்களை ஒத்தவையாகக் காணப்படுகின்றன. சமனான சதுர கற்களால் ஆன தூண் வரிசைகள் மூன்று உள்ளன: ஒவ்வொரு வரிசையிலும் குறைந்தது மூன்று கற்றூண்களேனும் இருந்திருக்கக்கூடும். ஓரிடத்திலிருந்த கற்களில் மடுக்கந்தை காவல் தெய்வங்களின் உருவங்களை ஒத்த உருவங்கள் செதுக்கப்பட்ட காவற்கற்கள் காணப்பட்ட போதிலும், அவை அரைவாசிக்கும் மேலாக நிலத்தில் புதையுண்டு மறைந்துள்ளன. அதுமட்டுமின்றி, இவற்றுக்கிடையே படிகள் இருந்தமை கண்கூடு என்றபோதிலும், தற்போது, இவற்றின் நடுவில் ஒரு மரம் வளர்ந்து வந்துள்ளது. மடுகந்தை விகாரையில் அமைந்துள்ள படிக்கட்டுகளில் இராட்சத முதலையின் (மகரம்) உருவத்துடன் கூடிய கொரவக்கல்லொன்று மேற்பரப்பிற்கு கொண்டு வரப்பட்டு, அது மறுபக்கமாகத் திருப்பப்பட்டுள்ளது. அகழ்வாராய்ச்சியின் போது, மேல் படிக்கட்டுகளை அவதானிக்க முடிந்ததுடன், மற்றைய படிக்கட்டுகளை அவதானிக்க முடியாது போனது. அவை, கொரவக்கல்லிற்கு அருகில்

புதையுண்டிருக்கலாம். அனைத்து பகுதிகளும் சரியான இடங்களில் உள்ளதோடு, ஒரு பெரிய கல்வெட்டும் உள்ளது. இன்னொரு பக்கம் தலை உடைந்த ஒரு மாட்டின் உருவமும், உபாசகர் ஒருவரை பிரதிபலிக்கும் உருவமும் உள்ளன. இச்சான்றாதாரங்கள் தமிழர் படையெடுப்பிற்குப் பிறகு அவர்களால் கட்டப்பட்ட இந்துக் கோயிலுக்குச் சொந்தமானவை என்பது தெளிவாகிறது.

மேலும் இங்கு, செங்கற்களின் குவியலாக காட்சியளிப்பது ஒரு தூபி என்பதோடு, அதன் எல்லா பக்கத்திலும் ஒவ்வொரு தூணைக் காணக் கூடியதாகவுள்ளது. கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள "குருன்கம" எனும் பெயரில் அமையப்பெற்ற ஊர் அல்லது நகரமொன்று குளக்கட்டிற்கு கீழே இருந்திருக்கக்கூடும் என்பதை சிறிய நீர்பாசனத்திட்டங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்கள் சான்றுபகருகின்றன. சம்பந்தப்பட்ட கிராமம் அல்லது நகரம் குளக் கரைக்குக் கீழே அமைந்திருக்க வேண்டும் என்பதை மேற்கூறிய சான்றுகளின் ஊடாக அறியக் கூடியதாகவுள்ளது. தற்போது இப்பகுதி "குருந்தன் ஊர்" எனும் தமிழ்ப்பெயர்க் கொண்டே அழைக்கப்படுகிறது. பிற்காலங்களில் இப்பகுதியில் குடியேறிய தமிழ் மக்கள் சங்கபோதி மன்னர் மற்றும் பிற மன்னர்களால் கட்டப்பட்ட விகாரைகளை இடித்து, அதிலிருந்த அனைத்து செங்கற்கள் மற்றும் கற்களையும் அகற்றியுள்ளனர். (இங்கு இருந்தக்கற்களை 1858 ஆம் ஆண்டுகளில் முள்ளிவாய்க்கால் கோவிலின் நிர்மாணப்பணிகளுக்காக உபயோகித்துக் கொண்டதாக திரு. ஜே.பி. லூயிஸ் தனது வன்னி கையேட்டில் குறிப்பிட்டுள்ளார்) (Lewis J.P. 1895 : 311)[3]

குளம் சேதப்படுத்தப்பட்ட போது இங்கு வாழ்ந்த சுதேசிகள், இந்நகரை கைவிட்ட காலம் தொடர்பில் உறுதியாகக் கூறமுடியாதுள்ளது. ஆனால், பதின்மூன்றாம் அல்லது பதினான்காம் நூற்றாண்டிலிருந்து இந்த இடத்தில் சுதேசிகள் வசித்திருக்கவில்லை என்பதை உறுதியாகக் கூறலாம். (Sessional Papers, 1889 : 449 ; Lewis J.P 1895 : 311-312).

கிராமத்துடன் இணைக்கப்பட்டுள்ள தண்ணிமுறிப்பு குளத்தின் கலிங்கல் தொட்டியில் இருந்த கற்களில் பலவற்றை இந்து ஆலயத்தினை அமைப்பதற்காக அகற்றபடாமல் இருந்திருந்தால், அதிஷ்டவசமாக அவை அழியாமல் இருந்திருக்கும் என திரு. லூயிஸ் வன்னி கையேட்டில் பதிவு செய்துள்ளார். (Lewis J.P 1895 : 295).[4]

---

[3]Stones were removed from Kuruntaniirmalai (in 1858 I believe) to build the Mullivaykkal temple. The doorway of that temple is constructed of carved stones from Kuruntaniirmalai. Diaries of June 8, August 5; 1887 and September13, 1889. 1883,

[4] At Tannirmuruippu, unfortunately, most of the stone have been removed to build a Hindu temple, otherwise it is in a good state of preservation.

திரு. எச்.சி.பி. பெல் 1905 ஆம் ஆண்டில் தனது தொல்லியல் நிர்வாக அறிக்கையில் உள்ள சுற்றுலா பயணக்குறிப்புகளில் குருந்தூர் தொடர்பான தொல்பொருள் ஆதாரங்களைப் பதிவு செய்துள்ளார்.

'குருந்தன்-மலை அமைந்திருப்பது தண்ணீர்-முறிப்புக் குளத்திற்கு வடக்கு முனைக்கும் குருந்தன்-குளத்தின் அணையின் தெற்கு முனைக்கும் இடையே ஆகும். குளங்களின் இரண்டு அணைகளும் மலைகளுக்கு இடையே உள்ள அடர்ந்த காடுகளினால் மூடப்பட்டுள்ளன. அணைக்கு அருகே முட்கள் நிறைந்த காடு இருப்பதால் அதன் உயரத்தை மதிப்பிடுவது கடினமான விடயமாகவுள்ளது. ஆனால், அதன் உயரம் சுமார் 200 அடி இருக்கும் என்று அனுமானிக்கலாம். என்னுடைய சுற்றுலாப் பயணத்தின் போது நான் கண்ட வித்தியாசமான மலை இதுவெனலாம். இம்மலை முற்றிலும் மாறுபட்ட கோணத்திலுள்ள ஒன்றாகும். ஏனெனில், இம்மலையில் ஒரு பாறையேனும் இல்லை. அத்தோடு மலையின் உச்சியின் அகலம் 150 X 100 அடிகளுக்கு இடைப்பட்டதாக இருப்பதோடு, செவ்வக வடிவில் சுமார் 3 ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ளது. மண்ணரிப்புகள், மண்சரிவு நிகழாமல் இருப்பதற்காக, மலை உச்சி சுமார் 10 அடி உயர்த்தப்பட்டு, சுற்றிலும் மதில் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. மேலும் இங்கு தடுப்புச் சுவரும் கட்டப்பட்டுள்ளது. இவை பற்றிய துல்லியமான அளவீடுகளைக் கொடுக்க முடியாத போதிலும் மேற்குறிப்பிட்ட விளக்கங்களும், அளவுகளும் அண்ணளவாக சரியானவை ஆகும். மலையின் உச்சியில் நான்கு கட்டிடங்களைத் தெளிவாக அவதானிக்க முடிவதோடு, மூன்று கட்டிடங்களின் இடிபாடுகளையும் காணமுடிந்தது. கட்டிடங்கள் தொடர்பான விளக்கத்தை வழங்குவதற்கு முன், அவை கட்டப்படுவதற்காக உபயோகிக்கப்பட்ட பொருட்களை பற்றி விவரிக்க வேண்டியது அவசியம். ஏனெனில், பொதுவான கட்டுமானத் திட்டத்தில் பல வழிகளில் பாரம்பரிய சிங்களக் கட்டிடக்கலையைப் பின்பற்றியிருந்தாலும், பயன்படுத்தப்பட்ட மூலப்பொருளில் ஏதோ ஒரு தனித்துவம் காணப்படுகின்றது.

பொதுவாக, தூண்கள் மற்றும் படிகள் அனுராதபுரம் மற்றும் பிற இடங்களில் நிர்மாணிக்கப்பட்டிருப்பதை போலவே கருங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், இங்கே உள்ள கட்டிடங்களின் சுவர்கள், தாதுகோபுரம், வட்டப்பிரகாரங்கள், பிரகாரங்கள் மற்றும் மாடங்கள் ஆகியவை சிறிதாக வெட்டப்பட்ட அதாவது பெரிய செங்கற்களை சிறு கற்களாக வெட்டினாற் போல் காணப்படும் வெட்டுக் கற்களினால் கட்டப்பட்டுள்ளன. அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை இராச்சியத்தின் இறுதி காலம் வரை கட்டுமானப் பணிகளுக்காக செங்கற்கள் மற்றும் கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ள போதிலும், இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள கற்கள் அவற்றைப் போலல்லாமல் கடினமாகவும்,

பழுப்பு நிற திடப்படுத்தப்பட்ட படிவுப்பாறை (gneiss) போலவும், அடிப்பகுதியில் துளைகளுடனும் காணப்படுகின்றன. (Bell 1905 : 33)[5].

திரு. பார்க்கர் இம் மலைத்தொடர்களுக்கு மத்தியில் காணப்படும் கட்டுமானத்தை "Altered Gneiss" (உருமாறிய கருங்கல்) என்று அழைக்கிறார். இவை 10 அங்குலம், 12 அங்குலம் மற்றும் 4 1/2 அங்குலங்களைக் கொண்ட சதுரக்குற்றிகளாக வெட்டப்பட்டுள்ளன. ஆனால், அவை சீரான அளவிலான, துல்லியமான சதுரக்குற்றிகள் அல்ல. மேலும் இவை சம அளவிலான கலவையன்றி உலர்ந்துள்ளன. சுவர்கள் எவற்றிலும் மேற்பூச்சு (plaster) பூசப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

ஒவ்வொரு மூலையிலும் கட்டிடங்கள் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தன என்பதை பின்வருமாறு உத்தேசமாக விளக்கவியலும். அதாவது, வடகிழக்கில் "தூபி", வடமேற்கில் "விகாரை", தென்கிழக்கில் வட்டதாகை மற்றும் தென்மேற்கில் கட்டிமுடிக்கப்பட்ட ஒரு பாரிய கட்டிடம் ஒன்றும், சில சமயங்களில் இது சிலை மனையாக (பிலிமகே) இருப்பதற்கும் வாய்ப்புகள் உண்டு.

தூபி நான்கு அடுக்குகளில் கட்டப்பட்ட உயரமான தளத்தில் மிகவும் சிறியதாக கட்டப்பட்டு இருந்ததுடன், அதன் மேல் இரண்டு பகுதிகள் வட்டமாக இருந்தன. கற்குற்றிகளின் உறுதியற்ற தன்மை காரணமாகவும், அதன் கட்டிடம் சிதைவடைந்த காரணத்தினாலும், அனுராதபுரத்தில் உள்ள மிரிஸ்ஸவெட்டிய தூபியைப் போன்று சிறந்த நிலையில் இது இல்லை. ஒரு தூண் மாத்திரம் தூபியின் மேற்குத் திசையில், முன்புறத்தில் அமையப்பெற்றுள்ளது. அது பலிபீடம் அல்லது பூஜைகளை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட மண்டபமாக இருக்கலாம். இக்கட்டிடம் பாதி அழிவுற்றிருந்தாலும், தூபியின் அமைப்பை ஓரளவுக்கேனும் தக்கவைத்துக் கொண்டுள்ளது. அத்துடன், நான் மேலே குறிப்பிட்ட கற்குற்றிகளைப் பயன்படுத்திக் கட்டப்பட்டது என்பதையும் பறைசாற்றுகின்றது.

விகாரை, 50 அடி உயரம் கொண்ட முப்பத்தாறு தூண்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள கட்டிடமாகும். கிழக்கு முகமாக இருக்கும் பகுதியானது சுமார் நாற்பது அடிகள் இருந்திருக்க வேண்டும். சுவர் மற்றும் கதவுகள் மண்ணுக்குள் புதைந்து போயுள்ளன. சதுர அமைப்பிலான தூண்கள் முறையாக கட்டப்பட்டுள்ளதுடன் அவை ஒரு அடி வரை மண்ணில் புதைந்துள்ளதோடு 10 அடி உயரம் பூமிக்கு மேலாக உள்ளன.

---

[5] small cut blocks of stone like large bricks.... The stone is a hard, brown, porous one, rather like solidified sponge.

35 அடி விட்டம் கொண்ட வட்ட வடிவமான கட்டிடம் வட்டதாகை ஆகும். இது, பன்னிரண்டு தூண்களைக் கொண்டதாவும், வெளிப்புறச் சுவர் சுமார் 2 1/2 அடி மொத்தமான அல்லது தடிப்பான கற்குற்றிகளாலும் கட்டப்பட்டுள்ளது. அவை அனைத்தும் அழிவடைந்துவிட்டன. எட்டு தூண்களால் சுற்றியமைக்கப்பட்ட மற்றொரு வட்டவடிவமான அறை உள்ளே அமைக்கப்பட்டிருக்கிறது. அவற்றுள் மூன்று சிதைவடையாமல் பூமியிலிருந்து சுமார் 5 அடி உயரத்தில் உள்ளன. தூண்கள் அனைத்தும் சதுர வடிவமானவையாகக் காணப்படுகின்றன. நுழைவாயிலானது வடக்குப்புறமாக உள்ளதோடு, 3 அடியும் 8 அங்குலங்களும் கொண்ட வெற்றுக் கற்கலால் ஆன நான்கு படிகளைக் கொண்டுள்ளது. இங்குள்ள காவற்கல் மற்றும் கொரவக்கல் என்பன அழிவடைந்திருக்கலாம் அல்லது அகற்றப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

மூன்று கட்டிடங்களில் சிலைமனையின் (பிலிம -கேய) தூண்கள் சிறப்பாக காணப்படுவதுடன், அவை மேடையில் கட்டப்பட்டுள்ளன. இதனால் இது பாதுகாக்கப்பட்ட சிறந்த நிலையிலுள்ள கட்டிடமாக உள்ளது. மேடை 85 அடி மற்றும் 64 அடிகளில் அமைக்கப்பட்டுள்ளதோடு, 4 அல்லது 5 அடி உயரம் கொண்ட கற்களாலான ஒரு தடுப்புச்சுவரால் பாதுகாக்கப்பட்டுள்ளது. நுழைவு வாயில் கிழக்குமுகமாக அமையப்பெற்றுள்ளதுடன் சிற்ப வேலைப்பாடுகள் அற்ற படிகற்களும், கொரவக்கல்லும் காணப்படுகின்றன. இங்குள்ள காவற்கற்கள் காணாமல் போயுள்ளன. உட்புறத்திலுள்ள கருவறை சுமார் 36 X 30 அடியில் அமைக்கப்பட்டிருப்பதோடு, 15 சதுர அடிகளுடன் கூடிய வரவேட்பறையொன்றும் உள்ளது. கருவறை 36 சதுர தூண்களைக் கொண்டுள்ளது. இவை, சுமார் 8 அடி உயரமும் 1 X 1 நீளமும் அகலமும் கொண்டவை. வரவேற்பறையில்/ திண்ணையில் பத்து தூண்கள் காணப்பட்டதுடன் அவற்றுள் நான்கைத் தவிர ஏனையவை அழிவடைந்துள்ளன. நான் ஏற்கனவே கண்டாராய்ந்த கட்டிடங்களின் அமைப்புகளுடன் ஒப்பிடுகையில் சற்று வித்தியாசமான அமைப்பிலேயே இங்குள்ள கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. நுழைவாயில் புதையுண்டிருந்தாலும், காவற்கல்லில் ‘‘மலர்ச் செண்டு’’ போன்ற வடிவமைப்புகள் இருப்பதைக் காணலாம். வரவேற்பறை மற்றும் கட்டிடத்தின் பிரதான பகுதிக்கும் இடையே உள்ள வாசல் சுமார் 6 அடி நீளமுள்ள கற்பலகையால் அமைக்கப்பட்டு இருந்தது, அவற்றில் பெரும்பாலானவை அதன் அருகே தரையில் விழுந்துள்ளன. செதுக்கப்பட்ட கணங்கள் மற்றும் இராட்சத முதலைகளின் உருவங்களால் இரட்டை வரிசையில் அதன் முழுநீளத்திலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. பொதுவாக சிங்கள சிற்பங்களில் காணக்கிடைக்காத கணங்கள் மற்றும் இராட்சத முதலைகளின் உருவங்களை இங்கு காணலாம். அவர்களின் தலையில் விளிம்புகற்ற உயரமான தலைக்கவசம் அணிந்திருப்பது போல செதுக்கப்பட்டுள்ளது. ஒரு வரிசையில் பன்னிரெண்டும் மறு வரிசையில் எட்டுமாக சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கட்டிடத்தின் சுவர்கள் கற்களால் ஆனவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலே குறிப்பிட்டுள்ள நான்கு கட்டிடங்களுக்கு மேலதிகமாக, கற்களாலான இரண்டு கட்டிடங்கள் காணப்படுவதோடு, அவற்றின் இருப்பிடத்தின் அடிப்படையில், முறையே விகாரை மற்றும் வட்டதாகை ஆகியவற்றின் நுழைவு வாயில்களாக இருந்திருக்கலாம். தெற்குச் சுவருக்கு அருகில், வட்டதாகை மற்றும் சிலை மனை (பிலிம-கேய) ஆகியவற்றிலிருந்து சமமான தொலைவில், சில தூண்களும் சிறிய கட்டிடத்தின் அடித்தளமும் உள்ளது. மலையுச்சியில் இவை தவிர்ந்த வேறெதுவும் இல்லை. வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் உள்ள உப்பரிகைப் பகுதி 60 அடி அகலம் கொண்டிருந்தது. இருப்பினும், ஏனைய இரண்டு பக்கங்கள் தொடர்பான தகவல்கள் பற்றி எனக்கு சந்தேகம் காணப்படுகின்றது. ஆனால், இப்பகுதியிலுள்ள அடிமரங்களை அகற்றினால் இப்பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும். இருந்தபோதிலும் இவ்வரைபடத்தில் என்னுடைய கற்பனையின்படி இந்த உப்பரிகையின் சுவரை புள்ளிக் கோடுகளால் வரைந்துள்ளேன்.

உப்பரிகையின் மத்தியில் எல்லைக் கற்றூண்கள் பன்னிரண்டாக மொத்தம் பதினாறு தொகுதிகள் உள்ளன. இவை விகாரைகள் மற்றும் ஆசிரமங்கள் (பிக்குகளின் அறைகள்) என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மலைத்தொடர்களின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் ஒரு உப்பரிகை இருந்திருக்கும் என்று நினைக்கிறேன். மேற்குப்புற மலையுச்சியில் 200 அடியை விட அதிக அகலமுள்ள ஒரு சுவர் காணப்பட்டதுடன், தெற்கே, இதே தூரத்தில் மற்ற சுவர்களின் தடயங்களையும், 80 அடி நீளமும் 60 அடி அகலமும் கொண்ட ஆழமான குளத்தையும் காணக்கூடியதாகவிருந்தது. இக்குளம் தற்போது ஒரு குழியாக மட்டுமே காணப்படுகின்றது. ஆனால் அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் அதன் கற்சுவரைப் பார்க்கக்கூடியதாகவிருக்கும்.

மலை உச்சியில் காணப்படும் அனைத்து உண்மைகளையும் விளக்கிவிட்டேன். மடலாயத்தின் கீழே உள்ள பழைமையான நகரம் மற்றும் மடாலயத்தை அந்த நகரத்துடன் இணைக்கும் இரண்டு பரந்த படிகள் மட்டுமே எஞ்சியுள்ளன. கிழக்குத் திசையில் உள்ள படிகள் சிறந்த நிலையில் உள்ளன.

மலையின் உச்சியில் இருந்து கீழே உள்ள உப்பரிகை வரை பதினெட்டு படிகளைக் கொண்ட படிக்கற்றொகுதி ஒன்று உள்ளது. அதில் உள்ள படிக்கற்கள் ஒவ்வொன்றும் சுமார் 17 அடி நீளமும், 10.5 அங்குலம் அகலமும், 6 அங்குலம் உயரமும் கொண்ட மென்மையான படிவுக் பாறைக் கற்களால் (gneiss slab) ஆனவை. இந்த படிக்கட்டுகள் தடுப்புச்சுவர் வழியாக கீழ்நோக்கிச் செல்லவில்லை, ஆனால் அதன் ஆரம்பத்தில் தொடங்கி உப்பரிகையின் மத்தியில் விழும் வகையில் சுமார் 10 அடி வரை திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. பின்னர் உப்பரிகையின் விளிம்பிலிருந்து தொடங்கி 100 படிகளைக் கொண்ட பெரிய படிக்கட்டுத் தொகுதியொன்று கீழே உள்ள காட்டுப்

பகுதியில் விழுகின்றது. 17 அடி நீளமும் 1 அடி அகலமும், 4 1/2 அங்குல ஆழமும், 6 1/2 அங்குலம் பருமனும் கொண்ட இந்த படிகள் மலையின் அடிவாரத்தை அடையவில்லை, ஆனால் கீழே கடந்து வந்த படிக்கட்டுடன் இணைக்கப்பட்டிருக்கலாம் என அனுமானிக்கலாம். இருப்பினும், தற்போது பாதி புதையுண்ட இடத்தைத் தவிர வேறு எந்த தடயமும் இல்லை.

வடக்குத் திசையில் உள்ள படிகட்டு மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளது. ஆனால் மேற்குலகில் காணப்படாத ஒரு விடயத்தினை இங்கு அவதானிக்க முடிந்தது. அதாவது புதையுண்ட இரட்டை வெற்றுக் காவற் கற்கள் காணப்படுகின்றன. அவை சுமார் 6 அங்குலங்கள் வரை மண்ணில் புதையுண்டுள்ளன. (Bell 1905 : 32-34).

பெல் அவர்களின் நிர்வாக அறிக்கையில், மலையின் அடிவாரத்தில் உள்ள தொல்லியல் அம்சங்கள் குருந்தன்-ஊர் எனத் தனித்தனியாக விவரிக்கப்பட்டுள்ளன.

வன்னி கையேட்டில் லூயிஸ் தெரிவித்த கருத்துக்களுடன் பெல் முழுமையாக உடன்படவில்லை. மலையிலுள்ள அனைத்து கட்டிடங்களும் தெளிவாக பௌத்த மடாலய கட்டிடங்கள் என்றும் அவை நன்கு பாதுகாக்கப்படக்கூடிய நிலையில் எஞ்சியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கீழ் நகரத்தில் உள்ள இந்துக் கட்டுமானங்கள் பொலன்னறுவையில் உள்ளதைப் போல அதிக எண்ணிக்கையில் இல்லை என்றாலும், அவை பௌத்த மக்கள் புதிய அறிமுகங்களுடன் வெளிப்படுத்தும் ஒத்துழைப்பை சுட்டிக்காட்டுவதாகக் குறிப்பிடுகின்றார். (Bell 1905: 34-35).

1933 ஆம் ஆண்டு தொல்லியல் நிர்வாக அறிக்கையில் குருந்தன் மலை அல்லது குருந்தன் விகாரை இருந்த இடம் தொல்லியல் பாதுகாப்புத் தளமாக அரச வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலம் மிக முக்கியமான தொல்பொருள் எச்சங்களைக் கொண்ட நிலமாக இருந்தமையால் தொல்லியல் தளமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது (ASCAR 1933:5). இவ்வாறு 1933 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி வர்த்தமானி இலக்கம் 7981 இல் 78 ஹெக்டேர் 1 ரூட் 62 பேர்ச் பரப்பளவுடைய இடம் தொல்பொருள் பாதுகாப்புத்தளமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலுள்ள பல்வேறு செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு கல்வெட்டுகளின் சிதைவுகள் இங்கு காணப்பட்டதாக திரு.பரணவிதான 1949 ஆம் ஆண்டு தொல்லியல் அறிக்கையில், பதிவு செய்துள்ளார் (ASCAR 1949:33). (இது பற்றிய மேலதிக விபரங்கள் குருந்தூர் கற்பலகைக் கல்வெட்டுகள் பற்றிய விளக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன).

2004 இல் தொல்லியல் துறையால் வெளியிடப்பட்ட இலங்கையின் கல்வெட்டு, தொகுதி. V, பாகம் II இல் (Inscription of Ceylon Vol. V, Part II) இங்கு காணப்படும் சிதைவுண்ட அல்லது துண்டு துண்டாக உடைந்து போன

கற்பலகைக் கல்வெட்டுகளில் காணப்பட்ட தொடு குறிகள் மூலம் அறிந்து கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பிலான குறிப்புகளை வெளியிட்டுள்ளது (இது பற்றிய மேலதிக விபரங்கள் குருந்தூர் கல்வெட்டுகள் தொடர்பான விளக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன).

தொல்பொருள் திணைக்களத்தால் தொகுக்கப்பட்டு, கலாசார அமைச்சினால் வெளியிடப்பட்ட பண்டைய நினைவுச்சின்னங்களின் பட்டியலில் 159/1 இன் கீழ் குருந்தூர் தொல்பொருள் தளம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

159/1 குருந்தன் மலை
மாவட்டம் - வவுனியா
பி. இ. அ. பிரிவு– கரைதுறைப்பற்று
கிராமம் - குமுழமுனை
வரைபடம் - பி.21/58

குருந்தன் குளத்தின் அடிவாரத்தில் பழைய கோட்டையின் எச்சங்கள் உள்ளன. இக்கோட்டையின் மூன்று பக்கங்களும் மண் அணையின் மீது எழுப்பப்பட்ட கற் சுவரால் சூழப்பட்டுள்ளன, மறுபுறம் நீர்த்தேக்கத்தின் கட்டுகளால் சூழப்பட்டுள்ளன. மேலும், கோட்டைக்குள் சிறு தூபி ஒன்றின் எச்சங்களும் காணப்படுவதோடு, காவற்களுடன் கூடிய தூண்களைக் கொண்ட பல கட்டிடங்களின் எச்சங்களையும் காணலாம். சிவன் கோயில் ஒன்றின் எச்சங்களும் காணப்படுகின்றன. மூடப்பட்ட பகுதியில் எல்லா இடங்களிலும் துண்டுகளாக உடைந்த கற்றூண்கள் காணப்படுகின்றன.

வழி- முல்லைத்தீவு அலம்பில் வீதியில் 6ஆம் 7ஆம் மைலுக்கு இடையில், மேற்குத் திசையில் நோக்கித் திரும்பி நெடுங்கேணி வீதியில் சுமார் 7 மைல்கள் வரை பயணிக்க வேண்டும்.

மலையின் உச்சியில் உள்ள தொல்பொருள் எச்சங்கள் பதிவு செய்யப்படவில்லை (பழைய நினைவுச்சின்னங்களின் பட்டியல் -1972 ப.219). ஆனால் மலையின் அடிவாரத்தில் உள்ள அனைத்து எச்சங்களும் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

திரு. சிறில் மேத்யூ இனரீதியான புரிதல் இன்மை, சட்டவிரோத ஆக்கிரமிப்பு அல்லது அழித்தல் ஆகிய காரணங்களால் ஆபத்தில் உள்ள இலங்கையின் கலாசார சொத்துக்களை பாதுகாக்க, யுனெஸ்கோவிடம் விடுத்த வேண்டுகோள், "1981 ஆகஸ்டில், சமீபத்திய இனவாத கலவரங்களின் போது, அவசரகால நிலை அமுலில் இருந்தபோது, சில தனிநபர்கள் அனுமதியின்றி தொல்பொருள் தளத்திற்குள் நுழைந்து, அங்கிருந்த பழங்கால சிலை மனையில் எஞ்சியிருந்த கல் தூண்களில் மீது ஓட்டினால் வேயப்பட்ட கூரையை

அமைத்து இச்சிலைமனையினை நவீன இந்துக் கோவிலாக மாற்றும் எண்ணத்தில் செயற்பட்டுள்ளனர். அதுமட்டுமின்றி, சிலைமனையின் தரையின் ஒரு பகுதியில் கான்கிரீட் இடப்பட்டு, சிமெந்து பூசப்பட்டு திரிசூலம் நடப்பட்டுள்ளது. கற்பூரம் முதலியவற்றை ஏற்ற திரிசூலத்தின் முன் வைக்கப்பட்டுள்ள கல் புத்தரின் புனிதமான பாதச்சுவடு பொறிக்கப்பட்ட கல் என்பது குறிப்பிடத்தக்கது. திரிசூலம் நடுவதற்காக, அருகில் உள்ள தூபி உச்சி சமன் செய்யப்பட்டு மீண்டும் சிமெந்து பூசப்பட்டுள்ளது. மிகப் பழைமையான பௌத்த விகாரையின் எச்சங்கள் உள்ள தொல்பொருள் தளத்தில் இந்துக் கோயிலைக் கட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளமை மேற்கூறப்பட்ட விடயத்தின் ஊடாகத் தெளிவாகிறது (தொல்லியல். கோப்பு: ஈசி/பி/என்/7 காணி உரித்துப் பதிவேடுகள் 5 மற்றும் 10, பின்னிணைப்பு டீ யில் ப. 44-47 )'' எனக் குறிப்பிட்டுள்ளார் (சிறில் மேத்யூ 1983:17-18).

பல தசாப்தகாலமாக தொடர்ந்த உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக, இப்பகுதியில் திட்டமிடப்பட்ட தொல்பொருள் ஆய்வுகள் எதனையும் மேற்கொள்வதற்கு சாத்தியமில்லாது போனது. இருப்பினும், இப்பிரதேசத்தைப் பற்றி பல்வேறு சுயாதீன ஆய்வாளர்கள் கட்டுரைகள் எழுதியுள்ளனர். அவர்களுள் விதந்து கூறத்தக்கவர்களாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சக்ரவர்த்தி வணக்கத்துக்குரிய எல்லாவல மேதானந்த தேரரை குறிப்பிடலாம். எல்லாவல மேதானந்த தேரர் இப்பகுதியில் காணப்படக்கூடிய பழங்காலச் சிதைவுகள் குறித்து விபரித்து எழுதியுள்ளார். அதாவது அவர் மிகவும் அடர்ந்த வனத்தினைக் கடந்து இவ்விடத்தை அடைந்ததாக கூறப்படுகிறது. ''மலையில் எல்லா இடங்களிலும் பல்வேறு வகையான இடிபாடுகள் காணப்பட்டன. இங்கு காணப்பட்ட கட்டிடம் 140 அடி சுற்றளவும் 21 அடி உயரமும் கொண்டதாக செங்கல்களைக் கொண்டு கட்டப்பட்டிருந்தது. நடுவில் தோண்டப்பட்டு செங்கற்களை முறையற்ற வகையில் இட்டு சேதப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் இங்கு காணப்பட்ட கட்டிடம் கண்கவர் தூபி எனத் திட்டவட்டமாய் கூறமுடியும். இந்த செங்கற்களும் மிகவும் பழைமையான யுகத்தைச் சேர்ந்தவை என்பதோடு, ஆங்காங்கே தென்படக்கூடிய வகையில் காணப்படும் அத்திவாரத்துடன் கல் தூண்களையும் கொண்ட மற்றொரு கட்டிடமும் இருந்தது. இதன் நுழைவாயில் அருகே பள்ளமொன்றும் காணப்பட்டது. கட்டிடம் முற்றிலுமாக இடிந்துபோயிருந்தது. இதற்கிடையில், வட்டதாகையொன்று இருந்தமைக்கான அறிகுறிகளும் காணப்பட்டன. சில தொல்பொருள் எச்சங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டிருந்ததையும் காணமுடிந்தது. அவ்விடத்தின் நீர் தேவைக்கென பயன்படுத்தப்பட்ட கிணறு அல்லது குளம் என்று கூறக்கூடிய வகையிலான இடங்களின் எச்சங்களும், போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட படிக்கட்டுத் தொகுதி போன்றதொரு அமைப்பினது எச்சங்களினையும் காணக் கூடியதாகவிருந்தது. இவற்றை நன்கு ஆராய்ந்து பார்க்கும் பட்சத்தில், மிகத் தெளிவாகப் புலப்படும் விடயம் யாதெனில், புனிதமான தலமாகக் கருதப்படக்கூடிய இவ்விடம் அனுராதபுர

காலத்திற்கு முற்பட்ட காலப்பகுதியிலிருந்து படிப்படியாக வளர்ச்சியுற்று பிற்பட்ட காலங்களில் இன்றியமையாத பௌத்த மடாலயமாக கருதப்பட்டுள்ளமை பற்றி அறிய முடியும். (மேதானந்த எல்லாவல, 2003:377).



அகழ்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு முன்னர் தூபி

# அத்தியாயம் - 03

## தற்போதைய தொல்லியல் தலையீடுகள்

பல தசாப்தங்களுக்குப் பின்னர் யுத்த சூழல் தணிந்த நிலையில், தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரிகள் இவ்விடத்திற்கு விஜயம் செய்தனர். 2010 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட முதற்கட்ட பயணத்தில், வட மாகாணத்தில் உள்ள தொல்பொருள் இடங்கள் மற்றும் நினைவுச்சின்னங்களை அடையாளம் கண்டு பதிவு செய்தனர். இவ்வாரம்ப கட்ட ஆய்வின் போது பாதுகாப்பின்மை காரணமாக, மலையைச் சுற்றியுள்ள தொல்பொருள் தளம் மட்டுமே பதிவு செய்யப்பட்டது. மலையின் உச்சியில் உள்ள தூபி, சிலை மனை மற்றும் தொல்பொருள் இடங்கள் பற்றியும், புதையல் தோண்டுபவர்களால் தூபியும், இவ்விடமும் சேதப்படுத்தப்பட்டிருந்தமை தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வட மாகாணத்தில் உள்ள தொல்பொருள் தளங்களை அடையாளம் கண்டு ஆவணப்படுத்துவதற்கான ஆரம்ப ஆய்வு அறிக்கை - 2010). இவ்வாறாக ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட காலத்தில் இப்பகுதி குருந்தூர் மலை தொல்லியல் தளம் என அடையாளம் காணப்படவில்லை. மாறாக, “தண்ணிமுறிப்புக் குளத்தின் சிதைவுகள்” என்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. 1933 ஆம் ஆண்டு இப்பிரதேசம் தொல்லியல் செயற்பாடுகள் தடை செய்யப்பட்டத் தலமாக அறிவிக்கப்பட்டது என்பது ஆய்வுகளின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது.



தொல்லியல் துறை அதிகாரிகள் ஆய்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்த தருணம்

இவ்வாறு 1933ஆம் ஆண்டு தொல்லியல் தடை செய்யப்பட்ட காணியாக பிரகடனப்படுத்தப்பட்ட காணியை வவுனியா பிராந்திய தொல்லியல் அலுவலக அதிகாரிகள் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் ஆராய்ந்து அடையாளம் கண்டு 2021ஆம் ஆண்டில் மீண்டும் அளந்து தெளிவாக எல்லை நிர்ணயம் செய்தனர். அப்போது நடத்தப்பட்ட ஆய்வில், 1933இல் அடையாளம் காணப்பட்ட தொல்லியல் தலத்தின் எல்லையைத் தாண்டியும் தொல்பொருட்கள் பரவியுள்ளமை கண்டறியப்பட்டது. அதன் பின்னர் தடை செய்யப்பட்ட நிலத்தின் எல்லையை விரிவுபடுத்த வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது. இவ்வகையில், தொல்பொருட்களைத் தன்னகத்தே கொண்ட தொல்லியல் சிறப்பு வாய்ந்த இப்புராதன பூமிப் பகுதியைப் புனரமைக்கும் முயற்சிகள் பல இடையூறுகளுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், தொல்பொருள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் தொடர்பில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் வெளியிடப்பட்ட தகவல்கள் மக்களின் கவனத்தை ஈர்த்தன. அதுமட்டுமின்றி சுயாதீன ஆய்வாளர்களால் இணையத்தில் வெளியிடப்பட்ட தகவல்கள் பொதுமக்களிடையே இவ்விடங்களைப் பார்வையிடுவதற்கு மட்டுமல்லாமல், ஆய்வு செய்யவும், பாதுகாக்கவும் மற்றும் மீட்டெடுக்கவும் எனப் பல்வேறு வழிகளில் ஆர்வத்தை ஏற்படுத்தியது. இருப்பினும், இத் தொல்பொருள் தளமானது புதையல் தோண்டுபவர்கள் மற்றும் மத, இனவெறியர்களின் தொடர்ச்சியான நாசகாரச் செயற்பாடுகளினால் அழிவுக்குள்ளானது மட்டுமின்றி, தொல்பொருள் இடங்களை வணிகமயமாக்கி பணம் சம்பாதிக்கும் ஆசையில் இருந்தவர்களின் வலையிலும் சிக்குண்டது என்பதை வருத்தத்துடன் குறிப்பிட வேண்டும். தொல்பொருள் தளங்கள் மற்றும் எச்சங்களை அழிக்கும் மற்றும் சிதைக்கும் தீவிரவாத செயற்பாடுகள் குறித்து தொடர்ந்து புகாரளிக்கப்பட்டன. தொல்பொருள் திணைக்களம் மற்றும் வண. கல்கமுவ சாந்தபோதி தேரர் ஒன்றிணைந்து இந்த தொல்பொருள் தளத்தை அபிவிருத்தி செய்த போதிலும், இதனை எதிர்த்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகளும், அவர்களுக்கு துணையாக இருந்த மிதவாதிகளும் ஆக்ரோஷமாக நடந்து கொண்டனர். இத்தொல்லியல் தளத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புச் செயற்பாடுகளை தமிழர் நிலங்களை அபகரிக்கும் முயற்சி என்று திரிபுபடுத்தி விளக்கம் கூறினர். அதன்படி, தொல்பொருள் திணைக்களத்திற்கு எதிராக AR 643/18 வழக்குப் பதிவு செய்யப்பட்டதோடு கல்கமுவ சாந்தபோதி தேரர் 2018 செப்டெம்பர் 05 ஆம் திகதி ஒட்டுச்சுட்டான் பொலிஸ் நிலையத்தினால் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போது, புத்தர் சிலை நிறுவுவது தொடர்பில் இரு தரப்பினருக்கு இடையில் மோதல் ஏற்பட்டதாக பொலிஸார் பொய்க் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர். வடமாகாணத்தில் உள்ள நீதிமன்றங்களில் தமிழ் மொழியே பயன்படுத்தப்படுவதால், வழக்கு தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி தெளிவான சட்ட உதவிகளைப் பெறுவது கடினமான செயலாகவிருந்தது.

வண. கல்கமுவ சாந்தபோதி தேரர் ஜகத் சுமதிபால, அகில இலங்கை பௌத்த சம்மேளனத்தின் தலைவருடனும் சம்மேளனத்தின் பல அதிகாரிகளுடனும் இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடினார். அன்றைய தினமே, வண. கல்கமுவ சாந்தபோதி தேரர், புத்தசாசன செயலணியின் மகா சங்கரத்தினருடனும், இவ்விடயம் தொடர்பில் செயலணியில் அங்கம் வகிக்கும் பிரதான பௌத்த அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டார். வண.கல்கமுவ சாந்தபோதி தேரர், "அனாகத பௌத்த புனருத்தாயக்க ஹெரவும் லக்ஷிய: முலத்தீவு குருந்தி விஹார யளி கொட நெகிமே மெஹேயும" (எதிர்கால பௌத்த மறுமலர்ச்சியின் திருப்புமுனை: முல்லைத்தீவு, குருந்தூர் விகாரை புனரமைப்பு நடவடிக்கை) என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளார்.

"இந்த சந்திப்பு குருந்தூர் விகாரை தொடர்பான அதன் பயணப் பாதையில் மிக முக்கயமான மைல் கல்லாக இருந்ததோடு, அகில இலங்கை பௌத்த சம்மேளனத்தின் அப்போதைய தலைவரான ஜகத் சுமதிபால, குருந்தூர் விகாரையை மீண்டும் நிறுவுவதற்கு ஆதரவளிக்கத் தயாராக இருந்தார். மேலும், இந்த வழக்கில் வாதாடுவதற்கு சம்மேளனத்தின் வழக்கறிஞர்கள் உறுதியளித்திருந்தனர். எவ்வாறாயினும், குருந்தூர் தொடர்பாக முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, பொலிஸ் தலைமையக பரிசோதகரின் வேண்டுகோளுக்கு இணங்க 2020 ஆகஸ்ட் 17 அன்று நிறைவுறுத்தப்பட்டது.

மேலும், பௌத்த சம்மேளனத்தின் தலைவரினால் தாபிக்கப்பட்ட "பௌத்த உரிமைகள் ஆணைக்குழுவிற்கு'' தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் மற்றும் அதிகாரிகள் ஆதாரங்களை வழங்கியதுடன், வடக்கு கிழக்கில் உள்ள தொல்பொருள் இடங்கள் தொடர்பான ஆதாரங்களையும் சமர்ப்பித்தனர். இவ்வாறாக பல ஆதாரங்கள் கிடைத்தன இது, குருந்தூர் விகாரையின் எதிர்காலத்தினை பாதுகாக்கும் இச்செயற்பாட்டின் மிக முக்கியமான மைல்கல்லாக அமைந்தது.

திரு. ஜகத் சுமதிபால தனது தனிப்பட்ட நன்கொடையினை குருந்தூர் விகாரையை மீளமைப்பதற்கு வழங்கியது மட்டுமின்றி, தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் இதன்பொருட்டு பூரண பங்களிப்பினை வழங்கிடவும் கோரினார்.





தூபியில் அகழ்வுப் பணிகளின் ஆரம்பம்

இதற்கமைவாக, குருந்தூர் விகாரையில் உள்ள தூபியின் அகழ்வாராய்ச்சி செயற்பாடுகள் 18 ஜனவரி 2021 அன்று ஆரம்பிக்கப்பட்டன. இப்பணிக்கான பங்களிப்பாளர் திரு. ஜகத் சுமதிபால அவர்களின் தலைமையின் கீழ் ஆரம்பமான இந்நிகழ்வில் தேசிய மரபுரிமைகள், கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமிய கலைகள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர். கபில குணவர்தன, தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர். அனுர மனதுங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் பயன்பாட்டிற்காக, சிங்கள வீர விதஹன அமைப்பின் ஸ்தாபக உறுப்பினரான திரு. பி.ஏ.மஹிபால நிர்மாணப்பணிகளுக்கான பங்களிப்பை வழங்க, இலங்கை இராணுவப் படையினரின் ஒத்துழைப்புடன் இங்கு தற்காலிக கட்டிடம் ஒன்று கட்டப்பட்டது.







தூபியில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது



தூபியில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது

தொல்லியல் துறை அதிகாரிகள், இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை சிவில் பாதுகாப்புப் படைவீரர்களின் அர்ப்பணிப்பினால் தூபியின் அகழ்வுப் பணிகள் மூன்று மாத காலத்திற்குள் நிறைவடைந்தன.

குருந்தூர் விகாரையை பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்த சந்தர்பத்தில் அது இந்து வழிபாட்டுத் தலம் என்று ஆதி காலந்தொட்டு நம்பிய தமிழர்கள் சிலர் இதனை இந்து வழிபாட்டுத் தலம் என்ற கருத்தை பரப்பிய நிலையிலும், அகழ்வாராய்ச்சி செயற்பாடு தொடங்கப்பட்டது. இருப்பினும் அதன் பின்னரும் அத்தலம் இந்து வழிபாட்டுத் தலம் என்று நம்பியவர்கள் அத்தூபியில் இருந்த யூப்பஸ்தம்பத்தினை (விகாரையின் சதுரக் கோட்டத்தில் காணப்படும் சிவலிங்கம் போன்ற வடிவம்) சிவலிங்கம் என்று சமூக ஊடகங்கள் மூலம் தகவல் பரப்பினர். இருப்பினும், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இது சிவலிங்கம் அல்ல, யூப்ப ஸ்தம்பம் என்பதை நிரூபிக்கும் வகையில் ஆதாரங்களை முன்வைத்தனர்.



தூபியில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது
கண்டுபிடிக்கப்பட்ட யூப்பகல

மேலும், இங்குள்ள தொல்லியல் எச்சங்கள் இத்தளம் பௌத்த வழிபாட்டுத் தலம் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி உறுதிப்படுத்துகின்றன.

அகழ்வாராய்ச்சி பணிகள் நிறைவடைந்த பின்னர், திரு. ஜகத் சுமதிபால 2020 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி அன்று தூபியின் மீது முதல் செங்கல்லை வைத்து பாதுகாப்புப் பணியை உத்தியோகபூர்வமாக தொடங்கி வைத்தார். நினைவுச்சின்னங்களைப் பிரதிஷ்டை செய்வதே தூபியை புனரமைத்த பின்னர் நிறைவேற்றப்பட வேண்டிய முக்கியமான பணியாகவிருந்து. 2021ஆம் ஆண்டு, ஜுன் மாதம் 12ஆம் திகதிக்குள் அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. வணக்கத்திற்குரிய மகா நாயக்க தேரர் மற்றும் அனு நாயக்க தேரர்களின் பங்கேற்புடன் புத்த பெருமானின் நினைவுச்சின்னங்கள், வெள்ளித் திரிபிடகம், உள்ளிட்ட பல்வேறு மங்கள சின்னங்கள் மற்றும் பிற தியாகப் பொருட்கள் தூபிக்கு ஊர்வலமாக கொண்டு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.



தூபியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமான போது

இலங்கை இராணுவம், விசேட அதிரடிப்படை (STF) மற்றும் இலங்கை காவல்துறை என்பன தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தன. இந்த அரிய நிகழ்வைக் காணவும் வழிபடவும் கொழும்பிலிருந்தும் ஏனைய பிரதேசங்களிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்திருந்தனர். இருந்தபோதிலும், காலை 9.30 மணியளவில் தமிழ் அரசியல்வாதிகள் குழுவொன்று மகா சங்கரத்தினரின் வழியைத் தடுத்ததுடன் வழிபாட்டுத் தலத்திற்குள் நுழையவிடாமலும் தடுத்தது. அக்குழுவினர் மிகவும் ஆக்ரோஷமாக நடந்து கொண்டார்கள். சில பௌத்த பிக்குகள் அவர்களின் தாக்குதலுக்கு இலக்கானார்கள். பாதுகாப்புப் படையினரின் தலையீட்டினால் இந்த செயல் செயலிழந்து போனது.

நிலைமையை அமைதிப்படுத்தும் வகையில், குருந்தூர் புனிதத் தளத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவில் பங்கேற்க வந்த பக்தர்களை பாதுகாப்புப் படையினர் தடுத்து நிறுத்தினர், திசைதிருப்பினர். இதனால், கலவரக்காரர்கள்

அந்த இடத்தை அடைய எந்தத் தடையும் இருக்கவில்லை. இறுதியாக, இந்த புனிதமான விழாவை ஒத்திவைக்குமாறு பாதுகாப்புப் படையினர் கோரிக்கை விடுத்தனர். முல்லைத்தீவில் உள்ள இந்துக் கோவிலில் நடைபெறும் திருவிழாவொன்றில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொள்வதால், நிகழ்வு ஒத்திவைக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது. இதுவே நிகழ்வை ஒத்திவைக்கவும் காரணமாகியது. தமிழ் அரசியல்வாதிகளுடன் கலந்துரையாடிய தொல்லியல் பணிப்பாளர் நாயகம், அப்போதைய நெருக்கடி நிலையைத் தீர்க்க வேண்டி, புத்த பெருமானின் புனித நினைவுச்சின்னங்களை பிரதிஷ்டை செய்யும் வைபவத்தை ஒத்திவைக்கத் தீர்மானித்தார்.

இச்சம்பவத்தின் பின்னர், 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி அன்று, முல்லைத்தீவு மஜிஸ்ரேட் நீதிமன்றம் புனரமைக்கப்பட்ட தூபியை அகற்றுமாறு ஒருதலைப்பட்சமான உத்தரவைப் பொலிஸாருக்கு பிறப்பித்தது. எவ்வாறாயினும், பொதுமக்களை தூண்டும் வகையிலான இவ்வுத்தரவை நிறைவேற்ற முடியாது என பொலிஸார் சட்டமா அதிபருக்கு அறிவித்திருந்தனர். இதன் விளைவாக, மஜிஸ்ரேட் குருந்தூர் தலத்தைப் பார்வையிடச் சென்றது. அவ்வாறு பார்வையிட்டதைத் தொடர்ந்து ஏலவே பிறப்பித்த உத்தரவை இரத்துச் செய்து இந்த விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. இருப்பினும், குருந்தூர் புனித தலத்தில் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலை பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கியது. இச்சம்பவத்தோடு தொடர்பில்லாத சிலர், மக்கள் மத்தியில் அவர்களின் தனிப்பட்ட பிரதிவிம்பத்தை கட்டியெழுப்பும் நோக்கில், தூபிக்காகவும், சில சட்டத் தேவைகளுக்காகவுமென்று கூறிக் கொண்டு, உதவிகளை அல்லது நன்கொடைகளைப் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், பௌத்தாலோக்க நற்பணி மன்றம், சட்ட மற்றும் பாதுகாப்புப் பணிகளுக்கான முழுமையான ஆதரவை தொல்பொருள் திணைக்களத்திற்கு வழங்கியது. ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டி சில்வா, பிரசாந்த லால் டி அல்விஸ் மற்றும் உதித்த எகலஹேவா ஆகியோர் நீதிமன்றப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தினர். சட்டத்தரணியும், தமிழில் சரளமாகப் பேசக்கூடியவருமான திரு. சமித்த கல்ஹாரா பௌத்தாலோக்க நற்பணி மன்றத்தின் சார்பாக தன்னார்வப் பணிகளைச் செய்தார். ரியர் அட்மிரல் கலாநிதி சரத் வீரசேகர மற்றும் பேராசிரியர் சன்ன ஜயசுமன ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தபோது இந்த நெருக்கடியான காலப்பகுதியில் இந்த சம்பவம் தொடர்பான உண்மையை பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தியதன் மூலம் தொல்பொருள் திணைக்களத்திற்கு உதவினர்.

குருந்தூர் புனிதத் தலமானது வரலாற்றுச் சிறப்புமிக்க பௌத்தத் தலம் என்பதை அகழ்வாராய்ச்சி மூலம் உறுதிப்படுத்திய பின்னர், 22 ஜூலை 2022 அன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஹரன், குருந்தூர் விகாரையை இந்து ஆலயமாகக் கருதி பூஜை நடத்த முயன்று தோல்வி கண்டார். அதன்பிறகு பௌத்தாலோக்க நற்பணி மன்றத்தின்

தலைவர் மற்றும் உறுப்பினர்கள் குழுவொன்றும், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளும், இலங்கை இராணுவத்தினரின் பாதுகாப்புடன் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி வண.கல்கமுவ சாந்தபோதி தேரர்களின் பிரித் பாராயணத்துடன் புனித நினைவுச்சின்னங்களை பிரதிஷ்டை செய்தனர்.

இச்சந்தர்ப்பத்தில், குருந்தூர் தொல்லியல் பகுதியை தொல்லியல் பாதுகாப்புத் தளமாக அறிவிக்கும் வகையில் ஆய்வுகள் நடத்தப்பட்டன. இதன்போது, தமிழர்களின் பயிர்நிலம் 600 ஏக்கரை பௌத்த விகாரைக்கு வழங்க வேண்டுமென அறிவிக்கப்பட்டதாக பொய்யுரைத்துத் தமிழர்களை தூண்டிவிட்டமையால் நெருக்கடி நிலை ஏற்பட்டது. இதன்போது தொல்பொருள் துறை பணிப்பாளர் நாயகம், அதிகாரிகளின் பாதுகாப்பு கருதி பாதுகாப்பு பணியை இடைநிறுத்த உத்தரவிட்டார். அதன் பிறகும் பல்வேறு போராட்டங்களும், கலவரங்களும் இடம்பெற்றன. ஆயினும், நில அளவைத் துறையின் சிறப்பு ஆய்வுப் பிரிவின் அதிகாரிகள் பெப்ரவரி 2023 இல் அளவைச் செயற்பாட்டினை நிறைவு செய்தனர்.





தூபியில் புனித சின்னங்களைப் பிரதிஷ்ட்டை செய்த தருணம்

அமைதியைச் சீர்குழைக்கும் வகையில் நடந்துகொண்டதாகக் கூறி டீ.ஆர்.673/ 18ஆம் பிரிவின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது, தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானங்களை எதிர்த்து நீதவான் நீதிமன்றத்தால் வழக்கு தொடர முடியாது எனவும், அந்த இலக்கத்தின் கீழ் வழக்குத் தொடர சட்டரீதியான அதிகாரம் இல்லை எனவும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், இது தொடர்பான தீர்ப்பு 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது, பின்னர் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதனையடுத்து 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின்படி, தொடர்ந்து தொல்லியல் பணிகளை மேற்கொள்வதற்கான அனுமதி தொல்லியல் துறைக்குக் கிட்டியது.

இதற்கமைய, கடந்த காலங்களில் தொல்லியல் துறையினால் கைவிடப்பட்ட நிலையில் இருந்த கட்டிடங்கள் தற்போது முதன்முறையாக புனரமைக்கப்படுகின்றன. முதலில், தூபியில் அகழ்வாய்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு புனரமைக்கப்பட்டது. இரண்டாவதாக, சிலைமனை அகழ்வாய்வு செய்யப்பட்டது. தற்போது, சிலைமனையை புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



தூபியில் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது




தூபியில் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது




தூபியில் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது




தூபியில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது



தூபியில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது



தூபியில் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது



தூபியில் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது



தூபியின் புனரமைப்புப் பணிகள் நிறைவுற்ற பின்னர்

# அத்தியாயம் - 04

## குருந்தூர் மடலாயத்தின் வளாகம்

### தூபி

இத்தூபி மலையின் உச்சியின் அடிவாரத்தில் இருந்து தோராயமாக 200 அடி உயரத்தில் உள்ளது. சமதளமான அதன் தரை 110x100 மீட்டர் நீள, அகலத்தில் செவ்வக வடிவில் அமைந்துள்ளது. இந்த முற்றம் முற்றிலும் இயற்கையாகவே இவ்வடிவத்தில் அமையப்பெற்றதல்ல, மாறாக, சில இடங்களில் கல் சுவர்கள் கட்டப்பட்டு இம் முற்றம் தயார் செய்யப்பட்டுள்ளது.

இம்முற்றத்தின் வடகிழக்கு மூலையில் தூபி அமைந்துள்ளது. செங்கற்களால் ஆன செவ்வக முற்றத்தில் உள்ள தூபி செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. 20.5 x 18.5 மீட்டர் நீள, அகலம் கொண்டதாகவும், முற்றத்தில் 1.5 மீட்டர் உயரம் கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

எச்.சி.பி. பெல் தனது நிர்வாக அறிக்கையில் இந்தப் பாறை இனத்தை "கட் பிளாக்"( Cut Block) என்று அறிமுகப்படுத்தியுள்ளார். "கட் பிளாக்" (Cut Block) என்பது சிங்கள மொழியில் 'கபுக்' (செங்கல்) எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. இருப்பினும், அதன் அறிவியல் பெயர் லேட்டரைட் (Laterite) என்பது குறிப்பிடத்தக்கது.

2010 ஆம் ஆண்டு வட மாகாணத்தில் காணப்படுகின்ற தொல்லியல் தளங்களை அடையாளம் காணுதல் மற்றும் வரைபடமாக்குதல் தொடர்பான முதற்கட்ட அறிக்கையின்படி, பல்வேறு வகையான மரங்கள் மற்றும் செடிகளால் மூடப்பட்டிருந்த இத்தூபி சுமார் 6 மீட்டர் உயரமும் சுமார் 50 மீட்டர் விட்டம் கொண்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது (வட மாகாணத்தில் உள்ள தொல்லியல் தளங்களை அடையாளம் காணுதல் மற்றும் வரைபடமாக்குதல் ஆகியவற்றின் ஆரம்ப அறிக்கை - 2010).

இந்த தூபியின் அகழ்வாய்வுச் செயற்பாடு ஜனவரி 26, 2021 அன்று தொடங்கப்பட்டது. அகழ்வாராய்ச்சி தொடங்கப்பட்டபோது, தூபி மேட்டின் மீது சேரை, நுரை மரம், வீரைமரம், வேலமரம் போன்ற மரங்களும், புதர்களும் வளர்ந்து பற்றைக்காடாய் இருந்தது. தூபியின் மேற்பரப்பிலிருந்து அண்டத்தின் உட்பகுதி வரை அனுமதியற்ற அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு, அதன் விளைவாக செங்கற்கள் மற்றும் பிற பொருட்களால் நிரப்பப்பட்டு அப்பகுதி மூடப்பட்டிருந்தது (முல்லைத்தீவு, குருந்தூர் விகாரை தூபி அகழ்வாராய்ச்சித் திட்ட அறிக்கை 2021 : 19)

அகழ்வாய்வு நடவடிக்கைகளை ஆரம்பித்த போது, மேற்கூறிய உயரத்தினைக் கொண்ட மேட்டைச் சுற்றி சுமார் 150 சதுர மீட்டர் தூரத்திற்கு இடிபாடுகளின்

சிதைவுகள் சிதறிக்கிடந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. தூபியின் மேலே செங்கற்கள் போடப்பட்டிருந்ததால், ஆரம்பத்தில் அதனை தூபி என்று அடையாளம் காணமுடியாத நிலையே காணப்பட்டது, ஆனால் பின்னர் அது தூபி என்று உறுதி செய்யப்பட்டது. மேற்கூறிய அகழ்வாராய்ச்சி குறிப்புகளின்படி, மேட்டின் மீது மரங்கள் அதிக அளவில் வளர்ந்ததால் தூபியின் கட்டுமானம் தொடர்பான ஆய்வுகள் மந்தகதியிலேயே முன்னெடுக்கப்பட்டன, ஆனால் அகழ்வாராய்ச்சி தொடங்கிய இரண்டரை மாதங்களுக்குள் அகழ்வாய்வை நிறைவு செய்ய முடிந்தது. இதற்கு தொல்பொருள் திணைக்களத்தின் பணியாளர்கள் மற்றும் இலங்கை இராணுவம் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினர் ஆகியோர் அளப்பரிய பங்களிப்பை நல்கினர்.

பல சந்தர்ப்பங்களில், புதையல் தோண்டும் திருடர்கள் தூபியைத் தோண்டி, பழங்கால பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளமை தூபியின் அகழ்வாராய்ச்சி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போது, தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும், அண்டப்பகுதியில் சுவர்களுக்குச் சொந்தமான பூச்சுத் துண்டுகளுடன், தங்க முலாம் பூசப்பட்ட சிறிய உலோக மஞ்சுசாவின் (பெட்டி போன்றதொரு உபகரணம்) துண்டும் கண்டுபிடிக்கப்பட்டது (முல்லைத்தீவு குருந்தூர் விகாரை தூபி அகழ்வாய்வுத் திட்ட அறிக்கை 2021 : 38). இங்கு கிடைக்கப்பெற்ற தொல்பொருட்களுள்: சுவர்களில் பயன்படுத்தப்பட்ட அலங்கரிக்கப்பட்ட செங்கற்கள், மட்பாண்டத் துண்டுகள், உலோக நாணயங்கள், ஓடுகளின் துண்டுகள், நீலக் கண்ணாடி பாத்திரமொன்றின் துண்டு மற்றும் உலோக மணி ஆகியவையும் உள்ளடங்குகின்றன.




தூபி மேடை

மேலும், பல துண்டுகளாக உடைக்கப்பட்ட யூப்பஸ்தம்பம், கல் மலர் இருக்கை ஒன்றும் அதன் அடிப்பகுதியும், பல்வேறு வடிவங்களிலான செங்கற்கள் மற்றும் வேறு வகையான செங்கற்கள் போன்றனவும் இந்த அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தூபி அமைந்துள்ள செவ்வக வடிவான முற்றத்திற்குச் செல்ல தெற்கு திசையில் துவார மண்டபம் உள்ளது. கல்லால் அமைக்கப்பட்ட வாயில் வழியாக நுழைந்த பிறகு, இருபுறமும் விரிந்திருக்கும் கல் படிக்கட்டுத்தொகுதிகள் இரண்டின் ஊடாக முற்றத்தை அடையலாம். மேற்கூறிய கல் வாயிலில் கல்தூண் ஒன்று மட்டுமே தற்போது, எஞ்சியுள்ளது. இங்குள்ள கட்டுமானத்தின்படி, முதலில் அவ்விடத்தில் பியச (மழை, வெயில் என்பவற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள கூரையுடன் அமைக்கப்பட்ட நடைபாதை அல்லது வாசல் பந்தல்) இருந்திருக்கக் கூடும்.

இதனை அண்மித்த பகுதியில் அதிகளவில் ஓடுகளின் துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டமை மேற்கூறிய விடயத்தினை மேலும் உறுதிப்படுத்துகின்றது. அதுமட்டுமின்றி, தூபியின் முற்றத்திற்குச் செல்வதற்காக உருவாக்கப்பட்ட துவாரமண்டபம் இதன் தனித்துவமாகக் காணப்படுகின்றது. ஏனெனில், இவ்வாறான துவார மண்டபங்கள் நாட்டில் வேறு எந்த இடத்திலும் காணப்படவில்லை.

தூபியின் வெளிப்புறத்தில், செங்கற்கலால் செய்யப்பட்ட நிற்கும் தோற்றத்துடன் கூடிய யானைச் சிலைகளின் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சுமார் 60 செ.மீ. உயரமான நிற்கும் வடிவத்திலான யானை சிலைகள், சுமார் 60 செ.மீ. அளவிலான இடைவெளியுடன் அமைந்துள்ளன. அதில். இரண்டு சிலைகளுக்கு இடையில், குழிவான அல்லது உட்புறமாக வளைந்த தூண்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்த யானைச் சிலைகளுடன் கூடிய சிலைகளைக் கொண்ட இந்த மேடைச் சுவர், தூபியின் மேடை கட்டப்பட்ட காலத்தில் அமைக்கப்படாது பிற்காலத்தில் அமைக்கப்பட்டது என்பது புலப்படுகிறது.



பல இடங்களில் இவற்றிடையே இடைவெளிகள் ஏற்பட்டு விலகிச் சென்றுள்ளதுடன், பழைய எல்லைச் சுவருடன் இணைத்து கட்டப்பட்டதாகவும் புலப்படவில்லை. யானைகளின் சிலைகளுடன் கூடிய இந்த மேடைச் சுவரில் சில இடங்களில் பழைய

தூபி அமைந்துள்ள முற்றத்திற்கு செல்வதற்கான நுழைவாயில்

மேற்பூச்சின் பகுதிகளும் எஞ்சியிருப்பதைக் காணலாம்.




தூபி மேடையில் வெளிப்புறம் நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ள யானைகளின் தோற்றம்

மேடையில் உள்ள தூபியைச் சுற்றி 2 மீட்டர் அகலமுள்ள மண் முற்றம் உள்ளது. ஆனால் அதில் இடப்பட்டிருந்த கற்பலகைகள் தூபியின் முற்றம் முழுவதும் பரவலாக இடப்பட்டிருந்தற்கான சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை. இதனூடாக இவ்வமைப்பு பிற்காலங்களில் சேர்க்கப்பட்டது என்ற தெளிவினைப் பெறக் கூடியதாயுள்ளது.

தூபி முற்றத்தில் இருந்து அல்லி மலர் வடிவ வளையத்திலிருந்து (குமுது பொரதம) தொடங்கும் தாககோபுரம், முழுவதும் செங்கற்களானது. மேலும் அதன் வளையத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள கற்கள் தேவைக்கேற்ற வடிவத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன. அல்லி மலர் வடிவ வளையத்திலிருந்து சிறிது உயரத்திற்கு செங்கற்கள் மற்றும் கற்கள் கொண்டு தூபியின் காவல் வளையங்கள் வரை அமைக்கப்பட்டுள்ளது. மீண்டும் அந்தக் காவல் வளையங்களிலிருந்து, தாமரை மலர் வடிவத்தின் அடிப்பகுதியிலிருந்து, மேலே வைக்கப்பட்டப்பட்டுள்ள செங்கல் வரிசைகள் வித்தியாசமான முறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, அவை தாமரை மலரின் இதழ் கீழ் நோக்கி வளைந்திருப்பது போன்ற அமைப்புடன் காணப்படுகின்றது, அதன் மேற்பகுதி அண்டத்தை நோக்கி காணப்படுவதோடு, அதிலிருந்து செங்கற்கள் இரண்டு வரிசையாக அடுக்கப்பட்டு, மீண்டும் வெளிப்புறமாக தள்ளப்பட்டு இருக்கும் காவல் வளையத்துடன் கூடிய அமைப்பைக்


காணக்கூடியதாகவுள்ளது. இவ்வமைப்பு, காவல் வளையத்தின் மீது பெரிய தாமரையின் வடிவம் இருப்பதை தெளிவாக வெளிப்படுத்துவதாகக் கூறும் பேராசிரியர் மாலிங்க அமரசிங்க, இவ்வாறான அம்சங்களைக் கொண்ட வேறு எந்த தூபியையும் எமது நாட்டில் காண முடியாது என்றும், தாமரை வடிவில் காணப்படும் தனித்துவமான ஒரேயோரு தூபி இதுவாகும் என்றும் கூறுகின்றார். மேலும், பேராசிரியர் பரணவிதான அவர்கள் தாமரை வடிவத் தூபியில் இருக்கும் தனித்துவங்கள் என்று அடையாளப்படுத்தும் சில குணாதிசயங்கள் இத்தூபியில் இல்லை என்றும், சிறிய தாமரை வடிவிலான காவல் வளையம் மட்டும் காணப்படுவதால் அதனை தாமரை வடிவ தூபி என்று கருதமுடியாது எனவும், பேராசிரியர் மாலிங்க அமரசிங்க குறிப்பிடுவதோடு, அந்த வகையில் இந்தத் தூபியின் அண்டத்தின் வடிவமானது தாமரை வடிவமாகத் தென்பட்டிருக்கலாம் என்று மேலும் குறிப்பிட்டுள்ளார். தூபியின் கட்டுமான அம்சங்களின் அடிப்படையில், தற்போது காணக்கிடைக்கின்ற சிறப்பம்சங்கள் கி.பி. 7-9 நூற்றாண்டுகளைச் சேர்ந்தவையாக இருப்பதற்கும் வாய்ப்புகள் உண்டு எனக் கருதலாம்.





திட்டம் இல 01: தாதுகோபுரத்தின் நில வரைபடம்

தூபியின் பாகங்களினை அவற்றின் பழைய உருவ அமைப்பிற்கு கொண்டு வரும் வகையில் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுவதோடு, அதன்பொருட்டு பழைய செங்கற்களை ஒத்த செங்கற்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், தொல்பொருள் பாதுகாப்பு முறைகளின்படி, யூப்ப கல தூபிகளில் காணக்கூடிய அதே அம்சங்களோடு இத்தூபியைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான பாதுகாப்புப் பணிகள் நிறைவடைந்த பின்னர், அதன் பழைய வடிவத்தினை


மீட்டெடுத்து அதன் நிதர்சனத்தினை காண வழி செய்து தரும் வகையில் செயற்பட்டு வருவதோடு, அப்பழைய வடிவத்தினை மீட்பதுவும் உறுதி எனலாம்.




திட்டம் இல 03: தாதுகோபுரத்தின் குறுக்குவெட்டு முகம் (புனரமைப்புச் செயற்பாடுகளின் பின்னர்)




திட்டம் இல 03: தாதுகோபுரத்தின் பக்கக்காட்சி (புனரமைப்புச் செயற்பாடுகளின் பின்னர்)




திட்டம் இல 04: தாதுகோபுரத்தின் குறுக்குவெட்டு முகம் (புனரமைப்புச் செயற்பாடுகளின் பின்னர்)

**சிலை மனை**



சிலைமனையின் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட தருணம்



2010 இல் சிலைமனை காட்சியளித்த விதம்

தூபியில் இருந்து தென்மேற்கு திசையில் சுமார் 65 மீட்டர் தொலைவில் உள்ள கட்டிடம் சிலை மனையாகக் கருதப்படுகிறது. இது சிலை மனையாக இருக்கலாம் என்றும் திரு. பெல் தனது அறிக்கையில் கூறியுள்ளார். உயரமான மேடையில் கட்டப்பட்டுள்ள இச்சிலைமனையின் நுழைவாயில் கிழக்கு திசையில் உள்ளது. அது 28 மீட்டர் நீளமும், 05 மீட்டர் அகலமும் கொண்டதாகக் காணப்படுகின்றது. இது வெளிமண்டபம், அர்த்த மண்டபம் (அந்தராலய) மற்றும் கருவறை ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது. அவை முறையாக நுழைவு வாயில்கள் வழியாக படிப்படியாக உயரும் மண்டபங்களைக் கொண்டமைந்துள்ளன. சிலைமனைக்குள் நுழைவதற்கு சந்திர வட்டக்கல், கொரவக்கல் மற்றும் படிக்கட்டுகளுடன் கூடிய அழகான நுழைவாயில் உள்ளது. திரு. பெல் சிலை மனையைப் பற்றி குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலும் இங்கு காவற்கற்கள் காணப்படவில்லை. ஏனெனில், இந்நுழைவாயிலில் இருந்த கொரவக்கல், சந்திரவட்டக்கல் மற்றும் படிக்கட்டுகளை சேதப்படுத்தும் வகையில் அனுமதியற்ற அல்லது சட்டவிரோத அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்தோடு, இவ்விடத்தில் ஏறக்குறைய 3 மீட்டர் ஆழம் கொண்ட பள்ளம் காணப்படுவதோடு சந்திரவட்டக்கல் மற்றும் கொரவக்கற்கள் என்பன உடைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளதோடு. படிக்கட்டுகளும் அகற்றப்பட்டுள்ளமை தெளிவாகப் புலப்படுகின்றது.

இருப்பினும், 2010 வரை சந்திர வட்டக்கல் அகற்றப்படாமல் இருந்ததாகவும், படிக்கட்டுகள் அகற்றப்பட்டிருந்ததாகவும் தொல்லியல் துறை தெரிவித்துள்ளது. சந்திரவட்டக்கல் பலாபெத்தி (தாமரை இதழ்கள்) அல்லது தீச்சுடர் வடிவமைப்பால் மட்டுமே அலங்கரிக்கப்பட்டுள்ளதோடு இது அனுராதபுர காலத்தைப் பிரதிபலிக்கும் சந்திரவட்டக்கற்களின் அமைப்புடன் இருந்துள்ளன. இச்சந்திர வட்டக்கல் பல பகுதிகளாக உடைக்கப்பட்டு, அந்த இடத்தில் தோண்டப்பட்ட குழியின் அளவு முறையே 1.8 மீட்டர் நீளமும், 1.6 மீற்றர் அகலமும், 2.6 மீட்டர் ஆழமும் கொண்டதாகக் காணப்படுகின்றது. கொரவக்கற்களின் மேல் பகுதிகள் உடைக்கட்டு சேதப்படுத்தபட்டுள்ளதோடு, 5 படிகள் கொண்ட படிக்கட்டுகளில் 4 படிகள் உடைக்கப்பட்டுள்ளன. இது அரும்பு கரைச்சித்திர வடிவத்துடன் கூடிய லியவெல கரைச்சித்திர அலங்காரத்தால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.



2010 ஆம் ஆண்டில் சிலைமனைக்குச் செல்லக் கூடிய வகையில் காணப்பட்ட படிகள் காணப்பட்ட விதம்




சிலைமனை அகழ்வின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட சிலைமனையின் முன்புறம் காணப்பட்ட படிக்கட்டுத் தொகுதி

இப்படிக்கட்டுகளில் ஏறி அர்த்த மண்டபத்தை (அந்தராலய) அடையலாம். அம்மண்டபத்திலிருந்து படிக்கட்டுகள் ஊடாக கருவறையை அடையலாம். இப்பகுதி சந்திரவட்டக்கல், இருபுறமும் இரண்டு காவற்கற்கள் மற்றும் இரண்டு கொரவக் கற்களையும் கொண்டுள்ளது. சந்திர வட்டக்கலில் சிற்பங்கள் எதுவும் காணப்படவில்லை. இரட்டைக் காவற்கற்களில் அவற்றின் மேற் பகுதிகள் இடிக்கப்பட்டுள்ளதோடு, அவற்றின் கீழ் பகுதிகள் தரை மட்டத்தில் காணப்படுகின்றன. கொரவக்கல் இரண்டும் உடைக்கப்பட்டுள்ளதோடு, அவற்றில் மகரச் சிற்பங்கள் (இராட்சத முதலைகள்) மற்றும் அவற்றின் வாயிலிருந்து கொடியினை ஒத்த வடிவம் வெளிப்படும் வகையிலான செதக்கல் வேலைப்பாடுகள் காணப்படுகின்றன.



சிலை மனையின் கல் நுழைவாயில்

கருவறை நுழைவாயிலுக்காக கல் கதவுச் சட்டகம் அல்லது நிலை ஒன்றும் இருந்துள்ளது. கதவுச் சட்டக உச்சியில் அழகிய கல் வேலைப்பாடு காணப்படுகின்றது, அது தற்போது அர்த்தமண்டபத்தின் (அந்தராலய) மீது விழுந்து கிடக்கிறது. இச்செதுக்கல் வேலைப்பாடு மிகவும் அரிய செதுக்கல் வேலைப்பாடு என்பது குறிப்பிடத்தக்க விடயம். இது தொடர்பில் திரு.பெல்லின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த செதுக்கல் வேலைப்பாட்டில் மேல் வரிசையில் இராட்சத முதலை அல்லது மகரத்தின் வாயிலிருந்து வெளிப்படும் ஆண் மற்றும் பெண் ஜோடிகளின் உருவங்களின் தொகுப்புகளும், ஜோடிகளைப் பார்த்திடும் பைரவர்களின் (பெருத்தவயிற்றுடன் இரண்டு கைகளையும் மேற்தூக்கியவாறு காணப்படும் இராட்சதர்களின் உருவம்) உருவங்களும் காணப்படுகின்றன. இதுபோன்ற செதுக்கல் வேலைப்பாட்டினை விஜயராம மடாலய வளாகத்தில் உள்ள மாளிகையின் (அலங்காரமாக செதுக்கப்பட்ட பீடம்) வெளிப்புறச் சுவர்களை அலங்கரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள செதுக்கல்களில் காணலாம். ஆண் மற்றும் பெண் உருவங்களில் இருவரின் உடல்களையும் புடைப்புச் சிற்பங்களாக செதுக்கியுள்ளனர். மேலும், ஜடாமகுடத்துடன் கூடிய தலைக்கவசம் ஒன்றினால் தலை பாதுகாக்கப்பட்டுள்ளது. திரு. பெல் இங்கு ஜடா மகுடத்தை சற்று மேல் எழும்பிய ஒரு விசித்திரமான தொப்பியாகவும், இங்கு இரட்டை உருவங்களை பைரவ ஜோடிகளாகவும் அறிமுகப்படுத்தியுள்ளார்.

சிலை மனையின் நுழைவாயிலின் நிலைகளின் மேலடுக்கில் காணப்பட்ட கற்செதுக்கல் வேலைப்பாடுகள்

சமீபகாலமாக இங்குள்ள சிலைமனையில் குலதெய்வத்திற்கு பலி பூஜை செய்வதற்கான சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது போலத் தென்படுவதாகவும், தொல்பொருட்களை சேதப்படுத்தும் அநியாயக்காரர்களினால் உடைத்து சேதப்படுத்தப்பட்ட கொரவக் கல்லின் ஒரு பகுதியை இங்கு கொண்டு வந்து வைத்து வழிபாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அகழ்வாய்வுப் பணிகள் குறித்து அகழ்வாராய்ச்சித் திணைக்களம் வெளியிட்ட

அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (முல்லைத்தீவு குருந்தூர் விகாரை சிலைமனை அகழ்வாய்வுத் திட்ட அறிக்கை 2022).

செவ்வக வடிவிலான மேடை செங்கற்களால் கட்டப்பட்டுள்ளதோடு, மேடையைச் சுற்றியுள்ள உள் பகுதி சரளைகளால் நிரப்பப்பட்டு சுட்ட செங்கற்கள் மற்றும் கல் தூண்களைப் பயன்படுத்தி கட்டப்பட்டுள்ளமை அகழ்வாராய்ச்சியினூடாக உறுதிப்படுத்தப்பட்டது. சிலைமனையானது கல் தூண்கள் மற்றும் கூரை மரப் பலகையினால் தயார் செய்யப்பட்டு பின்னர் மேற்பகுதி ஓடுகள் பயன்படுத்தி வேயப்பட்டிருக்க வேண்டும் என்பதை சிலை மனையிலிருந்தும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் காணப்படும் ஓடுகள் சான்று பகர்கின்றன. மேலும், தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் போது கிடைத்த 500க்கும் மேற்பட்ட இரும்பு ஆணிகள் கூரை அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்டவையாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (முல்லைத்தீவு குருந்தூர் விகாரை சிலைமனை அகழ்வாய்வுத் திட்ட அறிக்கை 2022).

கல்தூண்களுக்கு இடையில் செங்கற்களால் ஆன சுவர்கள் இருப்பதாகவும், அவற்றின் மீது சுண்ணாம்பு பூசப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது (முல்லைத்தீவு குருந்தூர் விகாரை சிலைமனை அகழ்வாய்வுத் திட்ட அறிக்கை 2022). அர்த்தமண்டபத்தின் (அந்தாராலய) தரையில் ஒரு குறிப்பிட்ட அளவு அல்லது வடிவம் இல்லாத கல் அடுக்குகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், வடக்குத் திசை நோக்கியதாக அமைக்கப்பட்ட நுழைவாயிலொன்றும் இம்மனையில் உள்ளது (முல்லைத்தீவு குருந்தூர் விகாரை சிலைமனை அகழ்வாய்வுத் திட்ட அறிக்கை 2022).

கருவறை சதுர வடிவ அமைப்பில் 9.8x9.6 மீட்டர் நீள, அகலம் கொண்டதாக காணப்படுகின்றது. மனையின் உட்புறத்தைச் சுற்றி பயணிக்கக்கூடிய வகையில் ஒரு பிரதக்ஷிணபாதையைக் காணலாம். தரைத்தளத்தில் சீரற்ற கல் பலகைகள் வைக்கப்பட்டு பூச்சு பூசப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தும் காரணிகளை அடையாளம் காண முடிந்தாகத் தொல்பொருள் திணைக்களம் கூறப்படுகின்றது (முல்லைத்தீவு குருந்தூர் விகாரை சிலைமனை அகழ்வாய்வுத் திட்ட அறிக்கை 2022).




அகழ்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் தருணத்தில்


தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள தொல்பொருள் சான்றுகள் கொண்டுள்ள தனித்துவங்களின் அடிப்படையில் இவை அனுராதபுர காலத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன எனக் கூறலாம். சிலை மனை அகழ்வாய்வு அறிக்கை மற்றும் இதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையிலும் இவ்விடத்தில் இருந்து மூன்று புத்தர் சிலைகள் மற்றும் இரண்டு போதிசத்துவர் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.




சிலை மனை- அகழ்வின் பின்னர்




திட்டம் இல 05: சிலைமனையின் நிலவரைபடம்




திட்டம் இல 06: சிலை மனையின் முன்புற மற்றும் பக்கக் காட்சி




திட்டம் இல 07: சிலை மனையின் குறுக்கு வெட்டு முகம்



சிலை மனையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட தருணம்



சிலை மனை - அகழ்வுப் பணிகளின் பின்னர்

**புத்தர் மற்றும் போதிசத்துவர் சிலைகள்**
**நிற்கும் புத்தர் சிலை**



அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட நிற்கும் புத்தர் சிலையின் ஒரு பகுதி

இந்தச் சிலை ஆந்திர கடின சுண்ணாம்பு கல் என்று அழைக்கப்படும் கடினமான சுண்ணாம்பு வகை பாறையால் செய்யப்பட்ட நிற்கும் புத்தர் சிலை ஆகும். சிலை பிரதிஷ்டை செய்வதற்கு அதே பாறையில் செய்யப்பட்ட பத்மபீடமும் அமைக்கப்பட்டுள்ளது. அகழ்வாராய்ச்சி அறிக்கையின்படி, இந்த கல் இந்தியாவின் ஆந்திரா அல்லது வேறு ஏதேனும் நாட்டிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று கருதலாம். ஆனால், சிலை இம்மூலப்பொருட்களைக் கொண்டு இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ளது (முல்லைத்தீவு குருந்தூர் விகாரை சிலைமனை அகழ்வாய்வுத் திட்ட அறிக்கை 2022). இந்த புத்தர் சிலை வேறு நாட்டில் உருவாக்கப்பட்டு இலங்கைக்கு






அகழ்வின் போது கிடைத்த நிற்கும் புத்தர் சிலையின் முகத்தின் உடைந்த பகுதி

கொண்டு வரப்பட்டதாகவோ அல்லது இலங்கையிலேயே கிடைத்த கற்பாசாணத்தைக் கொண்டு சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற கைவினைஞர்களால் உருவாக்கப்பட்டதாகவோ இருக்கலாம்.
ஆனால், இந்த வகை கற்பாசாணத்தால் செய்யப்பட்ட சிலைகள் இந்நாட்டில் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. சேதப்படுத்தப்பட்ட புத்தர் சிலையின் பாதப்பகுதி, அடி அல்லது பாதப்பகுதிக்கு மேலே ஒரு பகுதி, முகத்தின் ஒரு பகுதி என்பன அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், கிடைக்கப்பெற்ற சிலை பாகங்களின் அடிப்படையில், இங்கு 5 அடிகளுக்கு மேல் உயரமுள்ள சிலை இருந்திருக்கலாம் என்பது தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (முல்லைத்தீவு குருந்தூர் விகாரை சிலைமனை அகழ்வாய்வுத் திட்ட அறிக்கை
2022).

சிலையின் முகத்தின் அமைப்பின் அடிப்படையில், கண்களில் இரத்தினங்கள் பதிக்கப்பட்டிருக்கலாம் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. சிலை மனையின் பிரதான சிலை என்ற சிறப்புடன் கூடிய இந்த புத்தர் சிலை கி.பி. இது 3-4 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த படைப்புகளின் ஆக்கப்பூர்வமான அம்சங்களைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது (முல்லைத்தீவு குருந்தூர் விகாரை சிலை அகழ்வாய்வுத் திட்ட அறிக்கை 2022). சிலைப் பீடம் மலர்களின் உருவத்தினால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இது பாதங்களைப் பொறுத்துவதற்கென்று ஒரு துளையைக் கொண்டுள்ளது. அத்துளைக்கு பின்னால் இன்னுமொரு வட்ட வடிவத் துளை உள்ளது, இது புத்தர் சிலையுடன் ஆலவட்டமொன்றினை (ඡත්‍රයක් -குடை) இணைக்க பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.



அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட நிற்கும் புத்தர் சிலையின் ஒரு பகுதி, முகத்தின் உடைந்த பகுதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு புத்தாக்கம் செய்யப்பட்ட சிலை

**அமர்ந்த நிலை புத்தர் சிலை**

இச்சிலை மனையில் 1 1/2 அடி உயரமுள்ள தலையில்லாத புத்தர் சிலையொன்று கண்டுபிடிக்கப்பட்டது. இது கிரானைட் பாறையால் செய்யப்பட்ட சிலையாகும். இச்சிலை வெளிநாட்டில் உருவாக்கப்பட்டு இந்த நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட அமர்ந்த நிலை சிலை எனலாம்.



சிலை மனை அகழ்வாராய்ச்சியில் கிடைத்த அமர்ந்த நிலை புத்தர் சிலை



குருந்தூர் மலையில் கிடைத்த 1970-77 காலப்பகுதிக்குரிய தொல்லியல் நிர்வாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அமர்ந்த நிலை புத்தர் சிலை

**இரட்டை போதிசத்துவர் சிலை**

இரட்டை போதிசத்துவரின் சிலைகளான இவை, அரச மற்றும் யோகி நிலையிலுள்ள அவலோகிதேஸ்வர போதிசத்துவர்களின் சிலை என்பதை அடையாளம் காணக்கூடியதாகவுள்ளது. இவ்விரட்டை போதிசத்துவர் சிலைகள், கி.பி 8 - 9 ஆம் நூற்றாண்டுகளைக் குறிக்கும் வகையில் படிக சுண்ணாம்புக் கல்லால் உருவாக்கப்பட்டுள்ளன. அரச அவலோகிதேஸ்வரர் சிலையில் அரச உடைகள், அரச ஆபரணங்கள் போன்றவற்றையும் ஹரம், கேயுரம், கங்கணம், நூபுரம் (தண்டை) மற்றும் கர்ணகுண்டலம் போன்ற பிற ஆபரணங்களையும் காணக்கூடியதாகவுள்ளது. யோகி அவலோகிதேஸ்வரர் சிலை யோகி அமைப்பில் காணப்படுவதோடு அதனை அடையாளம் காணக்கூடிய வகையில் காணப்படும் ஏனைய விடயங்களாக ஜடாமகுடம் மற்றும் அஜின, ஏதோ ஒரு மிருகம், புலி அல்லது சிறுத்தை போன்ற மிருகமொன்றின் தோல் இடுப்பைச் சுற்றி வயிற்றுக்கு மேல் கட்டப்பட்டுள்ளது. யோகி அவலோகிதேஸ்வரரின் தலைமுடியில் இரண்டு சுருள்கள் அவரது தோள்களில் விழுகின்றன. இந்த இடத்தில் கிடைத்த யோகி அவலோகிதேஸ்வரரின் இடுப்பில் சுற்றி இருக்கும் சிறுத்தை அல்லது புலியின் தோலில் ஏதோ விலங்கின் முகத்தினைத் தெளிவாகப் பார்க்கக் கூடியதாகவுள்ளது. நம் நாட்டில் பொதுவாகக் காணக்கிடைக்கின்ற சிலைகளைப் போலவே இவையும் இருப்பதாகக் கூறலாம். யோகி அவலோகிதேஸ்வரரின் மேல் உடல் வெறுமையாக இருப்பதோடு, ஆபரணங்களால் அலங்கரிக்கப்படாது இருப்பதுவும் குறிப்பிடத்தக்கது. ஆனால், மார்பின் குறுக்கே யோக இயல்பைக் காட்டும் வகையில் பூணூல் காணப்படுகிறது. அலங்காரம் இல்லாத யோகிக்கும், ஆபரணங்கள் அணிந்த குமார அவலோகிதேஸ்வரருக்கும் உள்ள வித்தியாசத்தை இங்கே தெளிவாகக் காணலாம். இரட்டை அவலோகிதேஸ்வரர் சிலைகளில், குமார அவலோகிதேஸ்வரர் சிலையின் தலைப்பகுதி மட்டுமே இவ்வகழ்வாராய்ச்சியின் போது கிடைத்துள்ளது, அதே சமயம் யோகி அவலோகிதேஸ்வரர் சிலையின் உடைந்த பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்விடத்தில் கிடைத்த சிலைப்பாகங்களில், சிலைகளின் உடைந்த கைகள், சிலையின் பாதம் மற்றும் சிலையின் பாதங்கள் இணைக்கப்பட்ட அடிப்பாகம் அதாவது சிலைப்பீடம் என்பன அடங்குகின்றன. போதிசத்துவர் சிலைக்குரிய அடிப்பாகங்கள் அல்லது சிலைப்பீடங்களும் இவற்றில் காணப்படுகின்றன. அவை தாமரை மலர் செதுக்கல் வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

புத்தர் சிலையின் இருபுறமும் அவலோகிதேஸ்வரரின் இரண்டு சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. இத்தகைய பண்புடன் கூடிய சில தலங்களே இலங்கையில் காணப்படுகின்றன. இவ்வகையில் இதற்கு மேலும் வலுசேர்க்கக் கூடியவகையில் இப்பண்புகளுடன் காணக்கூடிய இடங்களுள் முஹுது மகாவிஹாரை, சிதுல்பவ்வ மற்றும் திஸ்ஸமஹாராமை போன்றன கோடிட்டுக் காட்டக் கூடிய சில இடங்கள் எனலாம். (Bopearachchi, 2014, P.

171-8). குருந்தூர் விகாரையின் சிலைமனையில் பிரதான புத்தர் சிலையின் இருபுறமும் போதிசத்துவர் சிலைகள் இரண்டும் வைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதக் கூடியதாகவுள்ளது. மேலும், இந்த இரண்டு சிலைகளும் 8-9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துவதாகவும், பிரதான சிலையை எடுத்து மீண்டும் ஒருமுறை பிரதிஷ்டை செய்த சந்தர்ப்பத்தில் இருபுறமும் இந்த இரண்டு சிலைகளும் வைக்கப்பட்டிருக்கலாம்

என்பது பேராசிரியர் ஒஸ்மான் போப்பேராச்சியின் கருத்தாகும். நிற்கும் புத்தர் சிலை வைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்ற யந்திரகல இருந்த இடத்தில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட அஷ்ட மங்களப் பொருள்களுள் சிலவான தர்மச் சக்கரம், சங்கு, கொடி போன்றவை இங்கிருந்த யந்திரகலவில் சேமித்து வைக்கப்பட்டிருக்கலாம் என்பதன் ஊடாக இக்கருத்து உறுதிப்படுத்துகிறது. மேலும், அவரது கருத்துப்படி, 8-9 ஆம் நூற்றாண்டிற்குரிய அஷ்ட மங்களப் பொருட்களுடன் யந்திரகல புதிய சிலைமனை வீட்டுடன் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருதவும் இடமுண்டு. அதன்படி அக்காலப்பகுதியில் சிலை மனை நவீனப்படுத்தப்பட்டிருக்கலாம்.



போதிசத்துவர்
சிலையின் தலைப்பகுதி



அவலோகிதேஸ்வர போதிசத்துவரின் சிலை மற்றும் தலைப்பகுதி

இவ்விடத்தில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது பல தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பிராமணர், யோகி அல்லது போதிசத்துவரின் உருவம் போன்ற சிறிய சிலைகள் உள்ளடங்குகின்றன. இத்தலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கொடியை அஷ்ட மங்களப் பொருட்களில் ஒன்றாக அடையாளப்படுத்தலாம். சில உலோகங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள அதன் கம்பம் மட்டுமே தற்போது எஞ்சியுள்ளதோடு, கொடிப் பகுதி சிதைந்துபோயுள்ளது. இது


யந்திரகலவில் சேமித்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது. அத்தோடு, தட்டு அல்லது பாத்திரம் என்று கருதக்கூடிய உலோகப் பொருட்களின் பகுதிகள், 'பத்ரபீடய' என்று அழைக்கப்படும் இந்த உலோக வடிவமைப்பு அஷ்ட மங்கள பொருட்களில் ஒன்றாக கருதப்படுகிறது. சக்கரம் எனப்படும் உலோக வடிவமைப்பும் அஷ்ட மங்கள பொருட்களில் ஒன்றாகும், இது 15 பகுதிகளைக் (வட்டமொன்றினை பதினைந்து பகுதிகளாக பிரித்த அமைப்பினையொத்தது) கொண்டுள்ளதோடு மிகையான அலங்காரங்களுடன் கூடிய அரிய படைப்பு என்று அடையாளப்படுத்தப்படக்கூடியதொன்றாகக் காணப்படுகின்றது. இந்த அஷ்ட மங்களச் சின்னங்கள் சிலைமனை அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டன. மேலும், ஒரு குடுவை அல்லது விளக்கின் மேற்பகுதியாக இருக்கலாம் என்று கருதப்படக்கூடிய வட்ட வடிவிலான உடைந்த 2 பகுதிகளும் அவ்விடத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டன. உலோகத்தினால் தயாரிக்கப்பட்ட இப்படைப்பினை வடக்கு திசையின் அதிபதியான குபேர இராட்சசன் (குவேர பேய்) அல்லது பிரம்ம தேவனின் உருவம் எனக் குறிப்பிடலாம்.



குபேர அல்லது பிரம்ம உருவம் என்று கருதக்கூடிய படைப்பு



சிலை மனை அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட உலோகத்தினாலான அஷ்ட மங்களப் பொருட்கள்



சிலை மனை அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட உலோகத்தினாலான அஷ்ட மங்களப் பொருட்கள்



சிலைமனை அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட உலோகத்தினாலான சிலை



போதிசத்துவர் என்று அனுமானிக்ககூடிய வகையில் சிலைமனை அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட உலோகத்தினாலான சிலை

இச்சிற்பங்கள் திருப்திகரமான நிலையில் காணப்படாமையால் இவை தொடர்பில் மிகச் சரியான விளக்கம் கொடுப்பது கடினம் என்ற போதிலும் இவை கடினமான ஆந்திரா சுண்ணாம்புக் கல்லை மூலப்பொருளாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். அவற்றின் அமைப்பு தொடர்பான அம்சங்களைப் பார்க்கும்போது, இவை கி.பி. நான்காம் மற்றும் ஐந்தாம் நூற்றாண்டுகளின் பிற்பகுதியைச் சேர்ந்தவை எனக் கூறலாம். இச்சிற்பங்கள் கிடைத்த குருந்தூர் மலையில் கிடைத்த புத்தர் சிலையின் பாகங்கள் ஆந்திராவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. அதாவது, குருந்தூர் மலையில் காணப்படும் சிற்பம் மற்றும் புத்தர் சிலை இரண்டும் ஒரே காலத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும், அதாவது பேராசிரியர் ஒஸ்மான் போப்பேராச்சியின் கருத்திற்கமைய இவை கி.பி. நான்காம் மற்றும் ஐந்தாம் நூற்றாண்டுகளின் இறுதிப் பகுதியைச் சேர்ந்தவை எனலாம்.

இந்த சிற்பம் அவலோகிதேஸ்வர போதிசத்துவர் மற்றும் அவரது மனைவி தாரா ஆகியோரின் ஆரம்பகால சித்தரிப்புகளில் ஒன்றை வெளிப்படுத்தும் வகையில் காணப்படுகின்றது. போதிசத்வ அவலோகிதேஸ்வரர், அரச உடைகளை அணிந்து, முன் பார்த்தபடி, வலது கையில் தாமரை மலரைப் பிடித்துள்ளார். அவர் தனது இடது கையை இடுப்பில் வைத்துள்ளார். அவலோகிதேஸ்வரரின் அருகில் உள்ள இரண்டு பெண் உருவங்கள் காணப்படுகின்றன அவை, அவருடைய மனைவிகளான சீதா தாரா (வெள்ளை தாரா) அல்லது ஷியாம தாரா (பச்சை தாரா) ஆக இருக்கலாம். அவரது இடதுபுறத்தில் நிற்பவர் தன் உடலை முக்கால்வாசி அவரை நோக்கித் திருப்பியவாறு, போதிசத்துவரைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் மலர்ந்த தாமரை மலரை வலது கையில் பிடித்திருப்பதோடு, இடது கையை இடது இடுப்பில் வைத்திருக்கிறார். போதிசத்துவரின் வலது பக்கத்தில் நிற்கும் தாரா இடது கையில் மலர்ந்த தாமரை மலரையும், வலது கையை இடது பக்க இடுப்பிற்கு பின்புறமாக வைத்திருப்பது போலத் தெரிகிறது. முற்றிலும் தெளிவாக புலப்படவில்லை என்றாலும், போதிசத்வ மும்மூர்த்திகளுக்கு மேலே பறக்கும் இரண்டு உருவங்கள் (நடுவில் அவலோகிதேஸ்வரர் மற்றும் இருபுறமும் இரண்டு தாராக்கள்) பூக்களைத் தூவி வழிபடுவதாகக் கருதலாம் என்பது பேராசிரியர் ஒஸ்மான் போப்பேராச்சியின் கருத்தாகும். (2023-05-01 ஆம் திகதியன்று பேராசிரியர் ஒஸ்மான் போப்பேராச்சி அவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலினை அடிப்படையாகக் கொண்டது)



அவலோகிதேஸ்வர போதிசத்துவர் சிற்பத்தின் கோட்டுச் சித்திரம்





அவலோகிதேஸ்வர போதிசத்துவர் கல்வெட்டு



சிலைமனை அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கபட்ட களிமண்ணால் செய்யப்பட்ட காவலர்களின் சிற்பங்கள்

அகழ்வாராய்ச்சி அறிக்கையின்படி, சில படையெடுப்புகளால், சிலை மனையில் இருந்த அனைத்து சிலைகளும் அழிக்கப்பட்டதோடு, பின்னர் விகாரை சிதைந்ததன் விளைவாக சிலை மனையும் இடிந்து விழுந்திருக்கலாம் என்பது தெளிவாகின்றது. அழிவுற்றவற்றின் எச்சங்கள் இயற்கையாகவே நொறுங்கிய அடுக்குகளால் மூடப்பட்டிருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது (முல்லைத்தீவு குருந்தூர் கோயில் சிலைமனை அகழ்வாய்வுத் திட்ட அறிக்கை 2022). மேற்கூறப்பட்ட விடயங்கள் உண்மையெனில், இவ்வாறான படையெடுப்புகளின் பின்னர் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டு தெளிவாக அடையாளம் காணப்பட்ட நினைவுச் சின்னங்களில் இந்தச் சிலை மனையும் ஒன்று என்பதைக் குறிப்பிடலாம். அகழ்வாராய்ச்சி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கருவறையின் உள்ளே இடிந்து விழுந்த அடுக்கு பிற்பட்ட காலங்களில் சட்டவிரோதமாக மீண்டும் தோண்டப்பட்டுள்ளது. இச்சட்டவிரோத அகழ்வின் போது, கருவறையின் மத்தியில் இருந்த தரைக் கல்லை அகற்றி உட்புறம் வரை அனுமதியின்றி அகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அப்போது கருவறைக்குள் இருந்த சிலைகளை வைக்கப் பயன்படுத்தப்பட்ட இரண்டு பத்மபீடங்களும் அப்புறப்படுத்தப்பட்டு வெளியே எடுத்து வீசப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அனுமதியின்றிய அகழ்வாராய்ச்சியால் சீர்குலைந்த 1 1/2 அடி அளவிலான அமர்ந்த நிலையிலான புத்தர் சிலை தொல்பொருள் திணைக்களத்தின் அகழ்வாராய்ச்சியின் போது அடுக்கில் கண்டுபிடிக்கப்பட்டது (முல்லைத்தீவு குருந்தூர் விகாரை சிலைமனை அகழ்வாய்வு திட்ட அறிக்கை 2022).

அனுமதியின்றி தோண்டப்பட்ட குழியில் இருந்த மண்ணை அகற்றிய போது அவ்வகழ்வு நடவடிக்கை நீண்ட நாட்களுக்கு முன்பிருந்தே நடந்திருப்பது தெரியவந்தது. அகழ்வாராய்ச்சியில் சிலை மனையின் தரையில் உள்ள கருங்கல் பலகைகளின் கீழ் ஒரு செங்கல் வரிசை இருந்தது, இக்கல் வரிசை சிலை மனை புராதன கட்டம் என்பதை உறுதிப்படுத்துகிறது. (முல்லைத்தீவு குருந்தூர் விகாரை சிலைமனை அகழ்வாய்வுத் திட்ட அறிக்கை 2022)



சிலை மனையின் மத்தியில் அனுமதியின்றி தோண்டப்பட்ட குழியில் இருந்த மண்ணை அகற்றிய போது

**போயா மனை**

தூபியிலிருந்து மேற்கு திசையில் சுமார் 45 மீட்டர் தொலைவில், ஒப்பீட்டளவில் கல்லால் அமைக்கப்பட்ட சற்று பெரிய மற்றும் உயரமான கட்டிடம் உள்ளது. கட்டிடம் அமைக்கப்பட்டதன் நோக்கம் யாதெனக் காண்பது கடினமாக இருந்தாலும், இது போயா மனை என்று அனுமானிக்கக் கூடியதாயுள்ளது. 14.30 மீட்டர் நீளமும், 8.20 மீட்டர் அகலமும் கொண்ட இக்கட்டிடத்தின் பரப்பு முழுமையாக உள்ளடங்கக் கூடிய வகையில் பல வரிசையாக கல் தூண்கள் நடப்பட்ட இவ்விடத்தில் பல்வேறு அளவுகளிலான கல் தூண்களைப் பயன்படுத்தி கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. நடப்பட்ட 07 கல் தூண்கள் உடைந்த கல் தூண்களின் பாகங்களையும் சுற்று வட்டாரத்தில் தற்போது காணக் கூடியதாகவுள்ளது. தற்போது அங்கீகரிக்கப்பட்ட நினைவுச்சின்னங்களில், மிகப்பெரிய கல் தூண்களைப் பயன்படுத்திக் அமைக்கப்பட்ட கட்டுமானம் இதுவெனலாம். இங்குள்ள ஒரு தூணின் சுற்றளவு 33X37 செ.மீ. ஆகவும், உயரம் 278 செ.மீ. ஆகவும் காணப்படுகின்றது. பெல் தனது அறிக்கையில் இந்தக் கட்டித்தையே விகாரை என்று குறிப்பிட்டுள்ளார் என்பதை இதனூடாகத் உறுதியாய் அறிய முடிகின்றது.



போயா மனை

**கட்டிடச் சிதைவுகள் - I**

இந்த மண்டபத்திற்குள் சிலைமனைக்கு முன் வலது பக்கத்தில் (சமவெளியின் தெற்குப் பகுதியில்) இரண்டு கல் தூண்கள் நடப்பட்ட கட்டிடத்தின் எச்சங்களைக் காணலாம். இந்த கட்டுமானத்தின் பயன்பாட்டைக் கண்டறிவது கடினமாயுள்ளது. எனினும், இரண்டு கல் தூண்கள் கிழக்கு, மேற்கு திசையில் தொடர்ச்சியாக 1.95 மீட்டர் இடைவெளியில் நடப்பட்டுள்ளன. இவ்வாறாக கண்டறியப்பட்ட மெருகூட்டப்படாத இக்கல் தூண்களில் ஒரு கல் தூணின் சுற்றளவு 20x25 செ.மீ. ஆகவும் உயரம் 45 செ.மீ. ஆகவும் உள்ளது.

**கட்டிடச் சிதைவுகள் II**

மேற்படி கட்டிடத்தின் முன் வலதுபுறத்தில் (சமவெளியின் தெற்குப் பகுதி) நான்கு கல் தூண்களைக் கொண்ட கட்டிடத்தின் எச்சங்கள் காணப்படுகின்றன. தற்போது, எஞ்சியிருக்கும் கற்றூண்கள் ஆங்கில எழுத்துக்களில் L என்ற எழுத்தின் வடிவத்தை ஒத்திருக்கின்றன. இந்த கட்டுமானம் அமைக்கப்பட்டதன் நோக்கம் தொடர்பில் கண்டறிவது கடினமாயுள்ளது, எனினும், இது வெவ்வேறு அளவுகளில் நன்கு மெருகூட்டப்பட்ட 4 கல் தூண்களின் கட்டுமானமாகவும், ஒரு தூணின் சுற்றளவு 16X24 செ.மீ. ஆகவும், உயரம் சுமார் 64 செ.மீ. ஆகவும் உள்ளது.

**அரசமரமனை (போதிகர)**

தூபியைத் தவிர, மலையின் உச்சியில் உள்ள சமதளமான நிலத்தில் (முற்றத்தில்) மேலும் பல பழங்கால நினைவுச்சின்னங்கள் காணப்படுகின்றன. தூபி மேட்டில் இருந்து தெற்கு திசை நோக்கி சுமார் 65 மீட்டர் தொலைவில் வட்ட வடிவில் 10 கற்றூண்கள் நடப்பட்டுள்ளதோடு, இந்த கட்டுமானம் போதிகர என்று கருதப்படுகிறது (முல்லைத்தீவு குருந்தூர் விகாரையின் அகழ்வாய்வுத் திட்ட அறிக்கை 2021:15). இவை சம இடைவெளியில் நடப்பட்டுள்ள அதேநேரம், அவற்றில் சில உடைந்துள்ளன. வட்ட வடிவ மேட்டைச் சுற்றி செங்கல் சுவர் ஒன்று காணப்படுகிறது. அந்த மேட்டின் விட்டம் சுமார் 10.6 மீட்டர் இருப்பதோடு, தற்போது கிடைத்துள்ள உடைந்த கற்றூண்களில் காணக்கிடைக்கும் தூணின் அளவு 22X31 ஆகும். வடக்குத் திசை நோக்கி நுழைவாயில் உருவாக்கப்பட்டிருப்பதோடு, தற்போது சுமார் 03 படிகள் மாத்திரம் மீதமுள்ளன. அவற்றுள், ஒரு படியின் அளவு சுமார் 40X25 செ.மீ ஆகும். இது சமதளத்தில் ஓரளவு உயரமான மேடாகத் தெரிவதோடு மேட்டின் மத்தியில் 3 கல் தூண்களும் நடப்பட்டுள்ளன. திரு. பெல் தனது குறிப்புகளில் இந்தக் கட்டிடத்தை வட்டதாகை என்று குறிப்பிட்டுள்ளார்.



அரசமரமனை (போதிகர)

**பழைய குளம்**

சிலை மனையின் பின்புறம் உள்ள மேற்கு சுவருக்கு வெளியே சுமார் 10 மீட்டர் தொலைவில் பெரிய குளம் ஒன்று காணப்படுகிறது. குளத்தின் அளவு அண்ணளவாக 40 சதுர மீட்டர் ஆக இருப்பதோடு, ஆழம் சுமார் 10 மீட்டராகும். இந்த குளம் மேல் மண்டபத்தின் நீர்த் தேவையை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்பட்டிருக்கலாம். பின்னர் இக்குளம் படிப்படியாக அரிப்புக்குள்ளாகி மண் நிறைந்துள்ளதாகத் தென்படுகிறது.

இரண்டாவது மண்டபத்தில் காணப்படும் மிகப்பெரிய கட்டுமானமாக அம்சமாக இந்த குளத்தை குறிப்பிடலாம். இதனைவிட இங்கு நடப்பட்ட கல் தூண்களினாலான கட்டிடமும் மிகச் சிறந்த சான்றாக உள்ளது. இந்த கட்டுமானங்களின் பயன்பாடு குறித்து எஞ்சியுள்ள எச்சங்களை அடிப்படையாகக் கொண்டு கண்டறிவது கடினம்.

மேல் மண்டபத்தை அமைக்கும் போது அம்மண்டபத்தில் நீர் தேங்குவதைத் தடுக்கும் வகையில் நீரைத் திசை திருப்பி அல்லது வெளியேற்றவென அமைக்கபட்ட சில கற்பீலிகளைக் காணலாம்.



குளம்

**படிக்கட்டுத் தொகுதிகள்**

மடாலயத்திற்குச் செல்வதற்கு வடக்கு மற்றும் கிழக்கு திசைகளில் நடைபாதைகள் இருந்தமையை உறுதிப்படுத்தும் வகையிலான சான்றுகள் காணப்படுகின்றன. வடக்குச் சரிவில் உள்ள பாறைகளை அடைவதற்கு படிக்கட்டுகள் காணப்படுகின்றன. இந்தப் படிக்கட்டுகள் குருந்தூர் மலை குளத்திற்கு அருகில் இருந்ததை உறுதிப்படுத்தும் வகையிலான சான்றுகள் கிடைத்ததோடு, எல்லைச் சுவராகவும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மலையின் அடிவாரத்தில் இரண்டு இடங்களில் இந்த படிக்கட்டுகளின் பொருட்டு அதன் நுழைவாயிலில் அமைக்கப்பட்ட இரண்டு காவற்கற்கள் காணப்படுகின்றன. இந்த இரண்டு காவற்கற்களும் தற்போது, மண்ணால் மூடப்பட்டுள்ளன, எனினும், மேற்பரப்பில் அவற்றின் மேல் பகுதி சுமார் 8 செ.மீ. அளவில் தென்படுகின்றது. 1905 ஆம் ஆண்டின் தொல்லியல் ஆய்வு அறிக்கையில் திரு. பெல் படிக்கட்டுகள் பற்றித் தெரிவித்துள்ளார். இன்றும், படிகள் நிலத்திற்கு கீழே புதையண்டுள்ளன, மேலும் இரண்டு காவற்கற்கள் மலையின் கீழ் மட்டத்திலும், மத்தியிலும் காணப்படுகின்றன. கீழ் மட்டத்தில் படிக்கட்டுகளின் தொடக்கமாக கருதக்கூடிய இடத்தில் காணப்படும் காவற்கற்கள் இரண்டுக்கும் இடையே உள்ள இடைவெளி 4.5 மீ ஆகும், இது படிக்கட்டின் தொடக்கமாக கருதப்படுகிறது. இங்குள்ள காவற்சிலையின் அகலம் 40 செ.மீ.

என்பதோடு இப்போது நீரில் மூழ்கிய பகுதிக்கு மேலே தெரியும் பகுதியின் உயரம் சுமார் 17 செ.மீ. ஆகும். இரட்டைக் காவற்கற்களின் மூடப்பட்ட பகுதியின் அடிப்பகுதியில் மண்ணுக்கு அடியில் இருப்பதாக நம்பலாம், மேலும் தற்போது காணப்படும் காவற்கற்களை மையமாகக்கொண்டு, கிடைக்கும் ஆதாரங்களின் அடிப்படையில் குறைந்தபட்சம் 50-70 செ.மீ. அளவான பகுதி கீழே இருக்கும் என கருதலாம். இந்த இடத்திலிருந்து சுமார் 15 மீட்டர் தொலைவில், மலையின் மையப் பகுதியை நோக்கி, இன்னுமொரு காவற்கற் சோடியும், அதற்கு மேல் 15 மீட்டர் உயரத்தில் மற்றுமொரு இரட்டைக்காவற் சோடியையும் காணலாம். இந்த இடத்தில் உள்ள காவற்கற்களுக்கு இடையே உள்ள தூரம் 3.9 மீட்டர் ஆகும். இங்குள்ள காவற்கல்லின் அகலத்தில் 45 செ.மீ. மண்ணில் புதையுண்ட நிலையில் தற்போது மேற்புறத்தில் காணக்கூடியவாறு சுமார் 18 செ.மீ அளவிலான பகுதி எஞ்சியிருக்கிறது. இங்கு படிக்கட்டுத் தொகுதியொன்று மண்ணில் புதையுண்டுள்ளமை ஓர் இடத்தின் மேற்பரப்பில் மிகவும் குறைந்தளவில் தென்படும் படித்துறையின் ஊடாக தெளிவாகின்றது. படிகளில் ஏறியவுடன் காணப்படும் நடப்பட்ட கல் தூண்களைக் கொண்ட கட்டிடம் விகாரையின் வளாகத்திற்குள் நுழைவதற்காக அமைக்கப்பட்ட துவார மண்டபமாக இருக்கலாம். இங்கு நடப்பட்ட சுமார் 38x25 செ.மீ. அகலமும், 130 செ.மீ உயரமும் கொண்ட கல் தூண்களை காணமுடிவதோடு அவை பொலிவிழந்து காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



வடக்குத் திசையில் அமைந்துள்ள படிக்கட்டுத்
தொகுதிக்குரிய இரட்டைக் காவற்கற்கள்

கிழக்குச் சரிவில் உள்ள பாறைகளுக்குச் செல்வதற்கு அமைக்கப்பட்ட படிக்கட்டுகளில் தற்போது, 2-3 இடங்களில் ஒரு சில படிகள் மட்டுமே காணப்படுகின்றன. இந்த வகை படிகளை சேர்ந்த ஏராளமான படிகள் புதைக்கப்பட்டுள்ளன அல்லது அகற்றப்பட்டுள்ளன எனலாம். தற்போது, மீதமுள்ள படிகள் பெரிய மரங்களின் வேர்களில் சிக்குண்டுள்ள, எனினும், மேற்பகுதியில் சற்று உயர்ந்து தென்படுகிறது, ஆனால், இந்த நுழைவாயிலில் இருந்த காவற்கற்களை அவதானிக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயம். தற்போது, பாகங்களாகவும் முழுமையான படிகள் என்று அடையாளம் காணக்கூடிய வகையிலான பல படிகள் கிடைக்கப்பட்டுள்ளன, அவ்வாறு முழுமையான படிக்கட்டு என்று நம்பக்கூடிய ஒரு படியின் அகலம் 165 செ.மீ. ஆகும்.

மடாலயத்தின் வளாகத்தை நோக்கி செல்வதற்கு அமைக்கப்பட்ட படிக்கட்டுகளுடன் கூடிய பாதையின் பிரதான நுழைவாயில் வடக்குத் திசையில் அமைந்திருக்கக்கூடும் என்று அனுமாக்கலாம். இதனூடாக, பிக்குகளின் வதிவிட வளாகத்தில் அடையாளம் காணப்பட்ட அனைத்து கட்டிடங்களும் வடக்கு முகமாக அமைந்துள்ளமைத் தெளிவாக தெரிகின்றது.



கிழக்குத் திசையில் அமைந்துள்ள படிக்கட்டுத் தொகுதிக்குரிய படிக்கட்டு

**பிக்குகளின் வதிவிடம் (ஆராமை)**

பிக்குகளின் வதிவிடத்துக்குரிய கட்டிடம் உள்ளடங்களாக சதுரவடிவ முற்றத்திலிருந்து சுமார் 03 மீட்டருக்கு கீழே அந்த புனிதமான கட்டிடத்துடன் கூடிய எல்லைச் சுவரும் அதனைச் சூழ தொடர்ச்சியாக இன்னொரு எல்லைச் சுவரும் உள்ளது. இரண்டாவது எல்லைச் சுவர், வடக்கு, தெற்கு திசையிலும் கிழக்குத் திசையில் ஓரளவுக்கு சமமான அகலம் கொண்ட மலையைச் சுற்றிலும் ஒத்த அமைப்பில் தொடராக அமைந்திருக்கின்றது. மேற்கு திசையில் மற்ற திசைகளை விட சற்று கூடுதலான அகலத்துடன் தொடர்ச்சியாக அமைந்திருக்கின்றது. மடாலய வளாகத்தின் தேவைகளுக்காக திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்ட எல்லைச் சுவர் மேல் எல்லையில் இருந்து பிக்குகளின் வதிவிடத்தின் கட்டுமானப்பணிகளின் போது ஏற்பட்ட தேவைகள் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டன. இந்த இரண்டாவது எல்லைச் சுவரில் பழங்காலத்திற்குரிய தூண்கள் என அடையாளப் படுத்தக்கூடிய கற்றூண்கள் சில நடப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம்.



பிக்குகளின் வதிவிடம் (ஆராமை)

### குளம்

இந்தக் குளமானது குருந்தூர் மடாலய வளாகத்திற்கு வடக்கே அமைந்துள்ளது. மேலே உள்ள முற்றத்திற்கு ஏறுவதற்காக அமைக்கப்பட்ட காவற் சிலைகளுடன் கூடிய படிகளின் வரிசையின் ஆரம்பம் குளத்திற்கு அருகில் விழுந்திருக்கக் கூடும் என்று தோன்றுகிறது. இந்தக் குளம் சமீபத்தில் புணரமைப்புச் செய்யப்பட்டது. இதன்போது, ஆரம்ப காலங்களில் இக்குளத்தில் தடுப்பணைகள் இருந்ததற்கான எந்த தகவலும் கிடைக்கவில்லை. மாறாக, குளத்தின் மையப் பகுதிக்கு முன்னால் வடக்கு, தெற்கு திசைகளில் பரந்து விரிந்த குளத்தின் அணைகளாக உடைந்து அல்லது இடிந்து விழுந்த பழங்கால கற்றூண்கள் சில காணப்படுகின்றன.



பிக்குகளின் வதிவிட வளாகத்தின் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள குளம்

### கற்பாலத்தோடு கூடிய மண்மேடு

மேற்கூறப்பட்ட குளத்தின் அணைக்கட்டின் முடிவில், அதன் அருகிலேயே ஓடுகின்ற நீரோடையை பாதுகாக்கும் வகையில் அமைந்திருப்பது கற்பாலம் என மிகத் தெளிவாக அடையாளம் காண முடிகிறது. கிழக்கு - மேற்கு திசைகளில் பாலத்தின் இருபுறமும் தலா இரண்டு தூண்கள் வீதம் 8 தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், அவ்விடத்தில் கவிழ்ந்த கற்தூண்கள் மற்றும் கற்பலகைக் கல்வெட்டுகள் அதிக அளவில் காணப்படுகின்றன. கற்பாலத்திற்கு அருகில் உள்ள நீர்வழிப்பாதைக்கு அருகில் கவிழ்ந்த 03 கற்றூண்கள் காணப்படுகின்றன. கற்பாலத்தின் ஒரு மூலையில் சிறிய மண்மேடொன்றைக் காணக்கூடியதாகவுள்ளதோடு சில சமயங்களில் அது கட்டிடமொன்று காணப்பட்ட இடமாக இருக்கலாம் எனக் கூறலாம். இவ்வகையில் அப்பாலம் அக்கட்டிடத்திற்குச் செல்லும் பொருட்டு அமைக்கப்பட்டிருக்கலாம்.



கற்பாலம்

## குருந்தூர் கற்பலகைக் கல்வெட்டு

குருந்தூர் கற்பலகை கல்வெட்டின் ஊடாக வட மாகாணத்தில் உள்ள ஒரு மடத்தைப் பற்றி பல முக்கியத் தகவல்களை அறியக்கூடியதாகவுள்ளது. 1889 குருந்தூர் விகாரைக்குச் சென்ற திரு.ஜே.பி லூயிஸ் அங்கு கண்ட கல்வெட்டு குறித்து பதிவிட்டுள்ளார். iii ஆம் மஹிந்த மன்னர் (கி.பி. 801-804) (சுரவீர 1976 : 114) தனது எட்டாவது ஆட்சி காலத்தின் போது தனது தாய் மற்றும் மகளுடன் குருந்தூருக்கு விஜயம் செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது. மேலும், இலங்கையில் காணப்படும் பெரிய கற்பலகைக் கல்வெட்டுகளில் இங்குள்ள கற்பலகைக் கல்வெட்டும் உள்ளடங்கும் என்றும் அதன் பல பகுதிகள் மங்கிவிட்டதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக மிஹிந்தலை கற்பலகைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் அனைத்தும், துறவிகளின் பொது விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் என்ற போதிலும், அவை அரசனால் எழுதப்பட்டவை, அவற்றிலுள்ள எழுத்துக்கள் அரசனால் பொறிக்கப்பட்டவை எனவும், அவற்றில் எழுத்துக்களில் பிழைகள், தவறுகள் இருந்தாலும் திருத்தப்படக் கூடாது என்றும் அவ்விதிமுறைகளை அப்படியே நடைமுறைபடுத்த வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளதை அக்கற்பலகைக் கல்வெட்டு சுட்டிக்காட்டுவதாகக் குறிப்பிட்டுள்ளார். அவர், அக்கற்பலகைக் கல்வெட்டைப் பார்த்தபோது, அது 3 துண்டுகளாக உடைந்திருந்துள்ளது. கோடுகள் வரையப்பட்டு தயாரிக்கப்பட்ட கற்பலகை கல்வெட்டைச் சுற்றியுள்ள கல்லில் உயர்த்தப்பட்ட எல்லைக் கோடும் ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (Lewis. J.P 1895 : 314: September 13, 1889). இங்கு ஏற்பட்ட சர்ச்சை தண்ணீரை அடிப்படையாகக் கொண்டது எனவும், அத்தகைய சர்ச்சைக்குரிய தண்ணீரைக் கொண்டிருந்த

குளம் குருந்தன் குளம் அல்லது தண்ணிர்முறிப்புக் குளம் என்பது சி.டபிள்யூ. நிக்கோலஸின் கருத்தாகும்.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தின்படி, இந்த கற்பலகைக் கல்வெட்டு, மலை உச்சியில் உள்ள தொல்லியல் தளத்தில் அல்ல, தொல்லியல் சான்றுகள் உள்ள குளம் உற்பத்தியாகும் நிலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. 1905 இன் தொல்லியல் ஆய்வு அறிக்கையில், எச்.சி.பி. திரு. பெல் அவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள கற்பலகைக் கல்வெட்டை அவர் கண்களால் காணவில்லை எனப் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (Bell 1905: 19).[6]

1949 இல் தொல்லியல் ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குருந்தூர் கற்பலகைக் கல்வெட்டு குறித்து பேராசிரியர் பரணவிதான கருத்து தெரிவித்துள்ளார். இந்தக் கல்வெட்டைப் பற்றி லூயிஸ் கூறிய விடயம் உரிமம் பெற்ற சுற்றுலா வழிகாட்டிகள் புராதன நகர சுற்றுப்பயணங்களில் வெளிநாட்டினருக்கு கூறும் விடயங்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. 1931 இல் தொல்லியல் துறையினால், குருந்தூர் தொல்லியல் தளத்தை தொல்லியல் பாதுகாப்புத் தளமாக அறிவிக்க வேண்டும் என்ற நோக்கில் என ஆய்வு செய்யப்பட்டது, அப்போது, திரு. லூயிஸ் மற்றும் பார்க்கர் தெரிவித்த கற்பலகைக் கல்வெட்டைக், கண்டுபிடிக்க முடியாமல் போனது. அதன் பிறகு, 1933 இல் குருந்தூர் நிலத்தில் அக்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் அடையாளம் காணப்பட்ட பகுதி அளக்கப்பட்டு தொல்லியல் பாதுகாப்புத் தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கலாநிதி. திரு. சி.இ.கொடகும்புர இந்தக் கற்பலகைக் கல்வெட்டைப் பற்றி அறியும் பொருட்டு இந்த பகுதிக்கு விஜயம் செய்தார். அதன்பிறகு இந்தப் பகுதிக்கு சுற்றுலா பயணிகள் வருகை தர ஆரம்பித்துள்ளனர். புதையல் தேடும் கொள்ளையர்களால் இந்த தொல்லியல் தளத்தில் உள்ள தொல்பொருட்கள் கடந்த சில ஆண்டுகளாக அழிக்கப்பட்டு வருவதாக அவர் பதிவு செய்துள்ளார். அவர் அக் கற்பலகைக் கல்வெட்டினை கண்டுபிடித்த போதும் அது துண்டு துண்டாக உடைக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார் (ARCAR 1949:33).

மேற்குறிப்பிட்ட கற்பலகைக் கல்வெட்டு தொடர்பில் திரு.பரணவிதான அவர்கள் கூறும்போது, அரசனால் எழுதப்பட்டது என்றும், அது தவறாக எழுதப்பட்டிருப்பதாகவும், அதற்காக மன்னிப்புக் கோரப்பட்டுள்ளதாகவும் பார்க்கர் மற்றும் லூயிஸ் கூறுவது நம்பத்தகுந்ததல்ல எனச் சுட்டிக்காட்டியுள்ளார். ஏனெனில், அன்றைய அரசர்களுக்கு இலக்கியத்திறனில் குறைவிருக்கவில்லை என திரு.பரணவிதான மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். அக்கற்பலகைக் கல்வெட்டைப் பரிசீலனைச் செய்துப் பார்த்தபின், இது இடைக்காலக் கற்பலகைக் கல்வெட்டு என்றும், மிஹிந்தலை

[6] The annual of the Vanni mentions a large slab inscription here, but I was unable to find it.

கற்பலகைக் கல்வெட்டு போல இதுவும் ஒரு சட்ட அமைப்பு என்று பார்க்கர் கூறியது மட்டும் சரியானது என்றும் கூறியுள்ளார். (ASCAR 1949:33).

இந்தக் கற்பலகைக் கல்வெட்டு குறித்து 2004 இல் சிறிமல் ரணவெல்லவினால் வெளியிடப்பட்ட தகவல்கள் வருமாறு.

| | |
|---|---|
| ஆட்சிக் காலம் | : நான்காம் (கி.பி 946-954) |
| காலம் | : கி. பி 10 ஆம் நூற்றாண்டு |
| எழுத்து | : இடைக்காலச் சிங்களம் |
| மொழி | : இடைக்காலச் சிங்களம் |

**கல்வெட்டு வாசகம்**

1) ............யச தெதின் தச அதி பதிரே ரஜ கள அபா சலமேவன் மஹரத்து புத்
2) .........மந்துல் ரந்தனா ரஜளியெஹி மினி வுடுனுயென் சிய முனதுன் பெஹெயீ லக்திவ் பொலொ யொன பரபு
3) ரென் ஹிமிவு துமா சரண நிய ரசின் அன் ரஜ முண்துன் பிசெஸ்வு திக் தெதின் ஹிரு பழே கெவின் மெஹேசுரு தழ தெபின் உவிந்து ரஜ விரிதின் சுரிந்து பபந்தா தெனெத் தினுசுரு சத்
4) செதின் கிதிசுரு பெண சரின் சுரகுரு சோமி குணென் நிசயுரு ..... நனி சரின் கப்துரு ரூ சரின் கதப் குழுனு ரெசேன் பொசது மேருவன் சுவ சரின் சம
5) ............ ஹுன் அபா சலமெவன் மகரஜ்ஹு துமா சத் லேங்கு பழமுவன ஹவுருதுயேஹி எசேல புன் சந்த அவப் மஸ்ஹி தாசபக் தவ
6) ஸ ...... சங்கரம் சிறிசங்கபோ ரஜ் மஹவெஹெர்ஹி வத் சிறித் விசினே சியதன் சஹ சசந்தா துண் நக்காஹி மஹசங் வத்ஹிமியன்
7) பச எவுன் வன சியெனெ பதே பொதெஹி எரு செயின் அகர்வனு இசா ........ சி ஹதவ சிட பவத்னா மொட் மே சிலாலேக ..........
8) ............... சிறிசங்கபோ அபய மஹரஜ் அகசுதம் நம் சங்பட் அப மேனியன் இசா....... சிரித் சந்தஹா நியாமகின் இசா வரத்தெவு பரெயா.......
9) ..... கத்து இசா ........ யா ரக்ரனுகம யுரெஹி அபயகிரி நகா பிலிபெந்தி கொட் ஸ ....... காரு சங்கரம் சிறிசங்போ ரஜ் மஹவெஹரெ க.........
10) ................ நு கொட் அரவனுயெஹி நவயே சந்த அவப் மஸெ தியவக் தவஸ் தளதகெஹி ..... மே ........ ரட் மே அங்கய இசிரிபாவ் பியங்கள் க .... ... கெமியன் .
11) ........ நிஸ்ஸன் ஹா சசந்தே மெ வெஹெரட் பியங்கலட் திபு சிரித் இஸா விவருனெத் எக்ஸே கொட் தன் உவதகே அர்வய் கெமி செமியன் காழ விசீயெக் ..........

12) ........ எக் பெகக் அபயகிரி வெஹேரே இஸா எக் பெகக் மெ வெஹெர்ஹி மஹபஹாஹி இஸா தபானு கொட்டீ வதழஹ விமி குசல்கெமி .... தபய சது

13) ….. கங்கனெஹி செயின் மெ சிசகின் சனிடிஹன் வூ சிரித் இஸா மெயிட் துன் கெபெலி கடயுத்து சே இசஹிய கடயுதுய இஸா மினிஸ்னட் கம்……

14) ........ நட் லபனு திவயுத்து சே இஸா ஏக் சே கொட்டி அவர்யி மெ வெஹெரே தபனு கொட்டி வாதால சிரித் போத்ஹி ....... சிரித் லியி சத்தேவாமி லீமி மெ வெஹெரே சிரித்தி மெ வெஹெர்ஹி வெஹெ

15) ர்கெமியன் …. கெமியன் பிலிமகெஹி சிரித்பொத்ஹி கீ செயின் பத் பதடி கத்த யுத்து இஸா பிளிமகெஹிஎம புத சிரித் செயிமெ ….. கசனு இஸா அனந்த பியன்கல்ஹி அ(டி)ன் தொலெசெ

16) …….பாஸே ஆவு வத்ஹிமியன் வெசி ஹிமியன் விசியா …………………………………..

17) .............................

18) .................................

19) ................................. (*Inscriptions of Ceylon*, Volume V, Part II, 221-224).



கல்வெட்டில் தொடுகுறி

இந்தக் கல்வெட்டின் உண்மைகளை ஆய்வு செய்தால், பார்க்கர் மற்றும் லூயிஸ் ஆகிய இருவரும் இக் கற்பலகைக் கல்வெட்டைத் தவறாகப் படித்துள்ளமை அல்லது பின்னாளில் தொல்லியல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட கற்பலகைக் கல்வெட்டு அவர்கள் குறிப்பிட்ட மேற்கூறிய கல்வெட்டு அல்ல என்பது தெரிய வரும்.





கல்வெட்டினைக் கண்டறிதல்

இங்கு காட்டப்பட்டுள்ளபடி, இந்த மடாலய வளாகம் அபய கிரிவிஹாரையுடன் இணைந்த விகாரையாகும். அபயகிரி விகாரையின் "இசிரிபவ் பியாங்கல" தியான மனையில் உள்ள சடங்குகள், சம்பிரதாயங்கள் தொடர்பான விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள், இவ்விகாரையில் பின்பற்றப்படும் சடங்குகள் சம்பிரதாயங்கள் பற்றியும் 21 விடயங்களின் அடிப்படையில் புத்தகத்தில் எழுதப்பட்டு ஒன்று அபயகிரி விகாரையிலும், மற்றொன்று மஹா பிரஸ்தத்திலும் வைக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. தியான மண்டபத்தில் பின்பற்றப்படும் விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள், சிலை மனை தொடர்பான விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள், சூரியன், நிலவு இருக்கும் வரை அவ்வாறே அவை பின்பற்றப்பட வேண்டும் என்றும், செய்யப்படும் அனைத்து சடங்குகளையும் புத்தகத்தில் எழுத வேண்டும் என்றும்

கூறப்பட்டது. அதுமட்டுமின்றி அப்புத்தகம் விகாரையில் வைக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. விகாரை தொடர்பிலான விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறித்து அரசர் விடுத்த எச்சரிக்கையை இக் கற்பலகைக் கல்வெட்டின் ஊடாக அறியக்கூடியதாகவுள்ளது. இங்கு கூறப்பட்டுள்ள விடயங்களை கருத்திற் கொள்ளும் போது, இங்கு செய்யப்படும் பூஜைகளை சரியாகச் செய்வதற்குத் தேவையான விதிகளையும், கட்டுப்பாடுகளையும் அரசன் பிறப்பித்துள்ளான் என்று ஊகிக்க முடிகிறது. அதுமட்டுமின்றி இந்தக் கற்பலகைக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ள உண்மைகளை மேலும் ஆராய வேண்டும் என்பதுவும் தெளிவாகின்றது. மேலும், இங்குள்ள புத்தர் கோவில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்ற தனித்துவம் வாய்ந்த இடம் என்பதைக் கற்பலகைக் கல்வெட்டில் உள்ள உண்மைகள் வெளிப்படுத்துகின்றன.

நீண்ட காலமாய் காட்டில் மறைந்திருந்த இக்கல்வெட்டினை 2020 ஆம் ஆண்டில், தொல்பொருள் திணைக்களத்தின் பிராந்திய தொல்பொருள் அலுவலகம் (வவுனியா / முல்லைத்தீவு / மன்னார்) மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் ஊடாகக் கண்டுபிடித்தது.

பல வழிகளிலும் சிதைவுக்குள்ளான கற்பலகை கல்வெட்டுகள் துண்டுகளாக உடைக்கப்பட்டு வெவ்வேறு இடங்களில் போடப்பட்டிருந்ததோடு, பிராந்திய தொல்பொருள் அலுவலகத்தின் அதிகாரிகள் தியாக மனப்பாங்குடனான சேவையின் விளைவாய் இவை கண்டறியப்பட்டன. திரு.லூவிஸ் 3 துண்டுகளாகக் கண்ட கற்பலகை கல்வெட்டு தற்போது 09 துண்டுகளாகக் கண்டுபிடிக்கப்பட்டன. இவை பிற்காலத்தில் பல துண்டுகளாக உடைந்து போயுள்ளதோடு சிதைவடைந்த நிலையிலுள்ளன.

பார்க்கர் மற்றும் லூயிஸ் ஆகியோர் பிறிதொரு கல்வெட்டைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை இந்தக் கல்வெட்டைப் பற்றி முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளினூடாக தெளிவாகின்றது. அக்கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளபடி, இது அபயகிரி விகாரைக்கு சொந்தமான சிரிசங்கபோ ராஜ மகா விகாரை என்று அழைக்கப்பட்டுள்ளது. மூன்று மகா பீடங்களின் (மஹாவிகாரை, அபயகிரிய, ஜேதவனராமய) சங்கத்தினரின் ஒத்துழைப்புடன் அரசனால் வகுக்கப்பட்ட விதிகள் மற்றும் நெறிமுறைகள் சங்கத்தினருக்குப் பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்ட பிரசங்கம் என்று தோன்றுகிறது.

மேலும் இவ்விகாரைக்குச் சொந்தமான தியான மண்டபம் (பதாநகரய) பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இந்தக் கல்வெட்டை வெட்டிய சத்தெவ் எனப்படுவோர் இது இவ்விகாரைக்குச் சொந்தமான சிலைமனைக்கான சிறப்பு பூஜைகள் நடைபெறும் இடம் என்கின்றார்கள்.

பேராசிரியர் சிறிமல் ரணவெல்லவின் கூற்றுப்படி, இக்கல்வெட்டு முழுமையாக பாதுகாக்கப்பட்டிருந்தால், பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டு எமது நாட்டின் வடக்கு மாகாணத்தில் கிடைத்த மிக முக்கியமான கல்வெட்டாக இருந்திருக்கும். இந்த கல்வெட்டு சிதைக்கப்பட்டிருந்தாலும், அதனைப் பற்றி அனைவரையும் அறியச் செய்வது அவசியம் என்றபோதிலும், சிதைவுற்ற இக்கல்வெட்டை தர்க்கரீதியாக பொருத்த இயலாதிருக்கின்றமையால், இக்கல்வெட்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, இதனை மீண்டும் ஒருமுறை ஆய்வு செய்து அக்கட்டுரையை தொல்லியல் துறையின் கல்வெட்டு சஞ்சிகையில் (Epigraphia Zeylanica) வெளியிடுதல் காலத்தின் தேவையாகும் என்பது பேராசிரியரின் எண்ணமாயுள்ளது.



பல துண்டுகளாக உடைந்து போயுள்ள கற்பலகை கல்வெட்டு

## **உசாத்துணை நூற் பட்டியல்**


අභයවර්ධන, එච්.ඒ.පී. (1978) *කඩඉම් පොත් විමර්ශණය.* කොළඹ: සංස්කෘතික දෙපාර්තමේන්තුව.

අසංග, කල්ප සහ අයි.පී.එස්. නිශාන්ත (2018) *පෞරාණික ස්ථාන හා ස්මාරක-මුලතිව් දිස්ත්‍රික්කය.* කොළඹ 07: පුරාවිද්‍යා දෙපාර්තමේන්තුව.

*උතුරු පළාතේ පුරාවිද්‍යා ස්ථාන හඳුනාගැනීමේ හා සිතියම්ගත කිරීමේ මූලික ගවේෂණ වාර්තාව-2010.* කොළඹ: පුරාවිද්‍යා දෙපාර්තමේන්තුව.

*ගුණසේන ශ්‍රී ලංකා සිතියම් පොත නව සංස්කරණය.* (2018) සීමාසහිත ඇම්.ඩී. ගුණසේන මුද්‍රණකරුවෝ සහ (පුද්ගලික) සමාගම: කොළඹ.

*දීපවංශය.* (1990) කිරිඇල්ලේ ඥාණවිමල හිමි (සංස්.). කොළඹ : එම්.ඩී. ගුණසේන සහ සමාගම.
නිකලස්, සී.ඩබ්. (1979) *පුරාතන හා මධ්‍යතන ලංකාවේ ස්ථාන විස්තරය.* සෝමපාල ජයවර්ධන (පරි.).

රාජකීය ආසියාතික සංගමයේ ලංකා ශාඛා සඟරාවේ නව වෙළුමේ IV කාණ්ඩය

පරණවිතාන, සෙනරත්. (1986) *උතුරුකරයේ ආර්ය ජනාවාස.* අභය ආරියසිංහ (අනු.).

*පුරාවිද්‍යා පාලන වාර්තා, (1970-1977, 1979).* කොළඹ 07: පුරාවිද්‍යා දෙපාර්තමේන්තුව

*පැරණි ස්මාරක නාමාවලිය.* (1972) කොළඹ: සංස්කෘතික අමාත්‍යාංශය.

*මහාවංශය I කොටස.* (1963) හික්කඩුවේ සුමංගල සහ බටුවන්තුඩාවේ දේව රක්ෂිත (සංස්.). මරදාන:

*මහාවංශය, II කොටස.* (1963) හික්කඩුවේ සුමංගල සහ බටුවන්තුඩාවේ දේව රක්ෂිත (සංස්.). මරදාන:
*මුලතිව් දිස්ත්‍රික්ක මූලික ගවේෂණ වාර්තා (අදියර I, II, III) (අප්‍රකාශිත),* කොළඹ 07: පුරාවිද්‍යා දෙපාර්තමේන්තුව.

මැතිව්, සිරිල්. සී. (1981) *සිහලුනි බුදු සසුන බේරාගනිව්.* සේරුවිල පූජානගර සංවර්ධන සමිතිය.

මැතිව්, කලුවාදේවගේ සිරිල්. (1983) *ජාතිවාදී අහිතකර පූර්වමතියෙන්, නීති විරෝධී අත්පත් කර ගැනීමෙන් හෝ හිතාමතාම කරන විනාශ කිරීමෙන් උපද්‍රවයට ලක් වී ඇති, ශ්‍රී ලංකාවේ සංස්කෘතික වස්තු සම්පත් හානියෙන් බේරා සංරක්ෂණය*

*කර තබා ගන්නා ලෙස ඉල්ලා සිටිමින් යුනෙස්කෝ ජගත් සංවිධානය වෙත ඉදිරිපත් කරන අභියාචනයකි.* අංක 101, බාන්ස් පෙදෙස, කොළඹ 07.

මෙධානන්ද හිමි, එල්ලාවල, (2003) *පාචීන පස්ස - උත්තර පස්ස - නැගෙනහිර පළාත හා උතුරු පළාතේ සිංහල බෞද්ධ උරුමය.* කොළඹ: දයාවංශ ජයකොඩි සහ සමාගම.

*ලංකා විශ්වවිද්‍යාලය ලංකා ඉතිහාසය, 1 කාණ්ඩය, 1 භාගය.* (1964) හේම් චන්ද්‍ර රාය (සංස්.), කැලණිය: විද්‍යාලංකාර විශ්වවිද්‍යාලය.

*ලංකා විශ්වවිද්‍යාලය ලංකා ඉතිහාසය, 1 කාණ්ඩය, 11 භාගය.* (1972) හේම් චන්ද්‍ර රාය (සංස්.), කැලණිය: විද්‍යාලංකාර විශ්වවිද්‍යාලය.

ලියනගමගේ, අමරදාස. (1989) *මධ්‍යකාලීන ලංකා ඉතිහාසය.* කොළඹ: රජයේ මුද්‍රණ නීතිගත සංස්ථාව.

*විමති විනෝදනී නාමන්තපාසාදිකාය විනයට්ඨකථාය ටීකා.* (1935) එච්. ගේබ්‍රියෙල් ද සිල්වා (සංස්.). කොළඹ: ලක්ෂ්මන් මුද්‍රණාලය.

වීරසිංහ, පී. (1981) *නාගයන්ගේ පා සටහන්ල* වවුනියා දිස්ත්‍රික්කයේ පුරාවස්තු. කොළඹ: සුලලිත ප්‍රින්ට්.

සිරිසෝම, එම්.එච්. (1986) *උතුරු නැගෙනහිර පෙදෙස්හි හෙළ උරුමය.* කොළඹ: එස්. ගොඩගේ සහ සහෝදරයෝ.

සුරවීර, ඒ.වී. (1987) *රාජාවලිය, විචාරාත්මක සංඥාපනය සහ ශාස්ත්‍රිය සංස්කරණය.* කොළඹ: අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

Bell H.C.P, (1909) *Archaeological Survey of Ceylon: North-Central, Central, and Northern Province; Annual Report: 1905*. Ceylon: Government Printer, Colombo.

Bingham, P. M. (1921) *History of the Public Works, Department, Ceylon, 1796 To 1913,* Volume I. Colombo: Government Printer Ceylon.

Bingham, P. M. (1922) *History of the Public Works, Department, Ceylon, 1796 To 1896,* Volume II. Colombo: Government Printer Ceylon.

Bingham, P. M. (1923) *History of the Public Works Department, Ceylon, 1897 To 1913,* Volume III. Colombo: Government Printer Ceylon.

Bopearachchi, Osmund, (2014) "Sri Lanka and the Maritime Trade. Bodhisattva Avalokiteśvara as the Protector of Mariners." *In Asian Encounters: Exploring Connected Histories*. Upinder Singh and Parul Pandya Dhar (eds), London: Oxford University Press.

Deraniyagala, S.U. (1992) *Pre history of Sri Lanka. Vol. I,* Colombo : Archaeological Survey of Ceylon.

Dias, Malini. (1991) *Epigrapical Notes, Nos. 1-18*. Colombo: Department of Archaeology.

Dias, Malini. (2019) The Antecedents of Siṁhala in its Formative Era, *Journal of the Royal Asiatic Society of Sri Lanka*, New Series, Vol. 64 Issue I. Colombo: Royal Asiatic Society of Sri Lanka.

*History of the Department of Archaeology, Vol. I.* (1990) Nandadeva Wijesekara (eds). Colombo 07: Department of Archaeology.

Lewis, J.P. (1894) Archaeology of the Vanni, *Journal of the Ceylon Branch of Royal Asiatic Society Volume XIII.* H.C Cottie: Acting Government Printer.

Lewis, J.P. (1895) *The Vanni Districts (Vavuniya and Mullaittivu) of the Northern Province, Ceylon*. Ceylon: H.C. Cottle, Acting Govt. Printer.

Mudiyanse, Nandasena. (1967) *Mahayana Monuments in Ceylon*. Colombo: M.D. Gunasena.

National Atlas of Sri Lanka. (2007) Sri Lanka: Survey Department.

Nichalas, C.W. (1956) Historical Topography of Ancient and Medieval Ceylon, *The Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society of Great Britain & Ireland* <u>*New Series, Vol. 6 (1959)*</u>. pp. 1-197, Colombo: Royal Asiatic Society of Sri Lanka

Paranavitana, S. (1933) *Report of the Archaeological Survey of Ceylon for 1934.* Colombo: Ceylon Government Press.

Paranavitana, S. (1943) *Epigraphia Zeylanica, Vol IV*. London: Oxford University Press.

Paranavitana,S. (October 1950) *Report of the Archaeological Survey of Ceylon for 1949*. Colombo: Ceylon Government Press.

Paranavitana, S. (1989) *Epigraphia Zeylanica, Vol III (Reprint)*. Colombo: Archaeological Survey of Ceylon.

Paranavitana, S. (1983) *Inscription of Ceylon, Vol. II, Part I.* Colombo: Archaeological Survey of Ceylon.

Rahula, Walpola. (1956) *History of Buddhism in Ceylon, The Anuradhapura period 3rd Century BC-10th Century AC.* Colombo: M.D Gunasena & Co'LTD.

Ranawella, G.S. (2004) *Inscriptions of Ceylon, Vol. V, Part II*. Colombo: Department of Archaeology.

*Statistical Pocket Book – 2022 Sri Lanka*. Available at: http://www.statistics.gov.lk/Publication/PocketBook. (Accessed: 00 April 2023).

*District Statistical HandBook, Mullaitivu District (2021)*
Available at: http://www.statistics.gov.lk/ref/HandbookDictionary
(Accessed: 00 April 2023).